

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் - 2020

மலர் 9 இதழ் 9

## பொருளடக்கம்



| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஜெய பேரிகை கொட்டிய ஜெயேந்திர குரு | 15 |
| உள்ளும் புறமும் | 21 |
| புரட்டாசி மாத விசேஷ தினங்கள் | 23 |
| ஸ்ரீ முகாம் நிகழ்ச்சிகள் | 26 |
| தமிழ் பாகவதம் | 30 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 32 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 28 | 35 |
| புராணக்கதை | 38 |
| மஹிஷாஸுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 40 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 41 |
| மகாபாரத சுருக்கம் | 43 |
| அத்வைத வினா - விடை | 45 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 47 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்





ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## நாமே காரணம்

இப்பக்கத்திற்கு பெரிய விளக்கங்கள் தேவையில்லை. இன்று நாம் வசிக்கும் உலகத்தைப் பற்றி சரக சம்மிதையில் விவரிக்கப்பட்டிருப்பதை கூறுகிறேன். இது உலக நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும். உண்மையான ஆதங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் ஒரு விமர்சனம். படிக்கவும்.

''அக்னிவேஸ்யரே இப்போது பல க்ரக நக்ஷத்ர உத்பாதங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே மக்களுக்குத் தேவையான மூலிகைகளை சேகரித்து வைக்கவும். அக்னிவேஸ்யரும் அவ்வாறே செய்து விட்டு குருவே மக்களுக்கு ஒரே வியாதியினால் ஒரே சமயத்தில் அழிவு எப்படி வரும்? என்று கேட்டார்.

ஆத்ரேயர் கூறுவார் மக்களிடையே பல வேறுபாடுகள் இருந்த போதிலும் நாடுகளில் காற்று, நீர், தேசம், காலம் இவை கெடுவதனால் ஒரே சமயத்தில் ஒரே இலக்கணமுள்ள நோய்கள் தோன்றி அனைவரையும் அழிக்கின்றன. கேடடைந்த காற்று விபரீத போக்கும். அதி உஷ்ணம், அதி சீதம், அதி வறட்சி, சுழல்கள், மணல், தூசி, புகை இவை துர் வாயுவின் இலக்கணங்கள்.

கேடடைந்த நீர், அதிக சேறு, கேடடைந்த மணம், நிறம், சுவை, வறட்சி, பருகும் சுவை இல்லையோ நீரில் வசிக்கும் ஜந்துக்கள் அதை விட்டு வெளியே போகின்றனவோ அது துர் நீரின் இலக்கணம்.

கேடடைந்த நாடு, இயற்கை அழிக்கப்பட்டது, வளங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், அறம், உண்மை, நன்னடத்தை இவை அழிந்திருப்பது, மக்களிடையே பரபரப்பு, துன்பம், நடுக்கம் இவை கேடடைந்த நாட்டின் இலக்கணம்.

கேடடைந்த காலம், இயற்கைக்கு எதிரிடையான அதிகமான குறைந்த குறிகள் தோன்றினால் அது கேடடைந்த காலம் என்று உணர். இந்த கேடடைந்த நான்கு காரணிகள்தான், கொள்ளை நோய்களுக்குக் காரணம். இயற்கையை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாத போதிலும் வெகு கஷ்டத்துடன் சில சிகிச்சைகள் மூலம் அவைகளை நீக்கலாம். அக்னிவேஸ்யர் குருவே நாட்டை அழிக்கும் இந்த நான்கும் எப்படி கேடடைகின்றன.

ஆத்ரேயர் இவைகள் கேடடைவதற்குக் காரணம் அதர்மச் செயல்கள். அதற்குக் காரணம் முன் பிறவியில் செய்த தகாத செயல்கள். நாடு, நகரம், வ்யாபார கேந்த்ரம் இவற்றின் தலைவர்கள் அறத்தைத் துறந்து மறச்செயல்களில் ஈடுபடுவதுடன் மக்களையும் ஈடுபடுத்துகிறார்கள். அவர்களும் மதி மயங்கி அவர் வழியில் செல்கின்றனர்.

அறமில்லாச் செயல்கள், அறத்தை அறவே அழித்து விடுகின்றன. மக்கள் அதர்ம செயல் செய்வதைப் பார்த்து தேவதைகள் அந்நாட்டை விட்டே ஓடி விடுகின்றன. அதனால் பருவமழை பொழிவதில்லை அல்லது விபரீதமாக மழை பொழிகிறது. காற்று மாசடைய, நீர் மாசடைய, காலம், மாசடைய தேசம் மாசடைகிறது. இவ்வாறு சத்யமில்லாமல் தர்மம், இல்லாமல் செய்வதெல்லாம் மறச்செயல்களே என்று ஆகும்போது பிணிகள் தோன்றுகின்றன. ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு எளிதாக பிணிகள் பரவி நாட்டையே அழித்து விடுகின்றன. பெரியோர்களை அவமதித்தல், பேராசை, சினம், மோகம், அகங்காரம் இவற்றால் வலிவுள்ளவர்கள் வலியற்றவர்களை அவமதிக்கின்றனர். யுத்தம் ஏற்படுகிறது. அழிவும் ஏற்படுகிறது. எனவே பிணிகள் ஒட்டு மொத்தமாக தோன்றுவதை ஜானபத உத்வம்சம் என்பர் சான்றோர். ஒவ்வொரு யுகத்திலும் தர்மம் குறைய குறைய மனித ஆயுளும் குறைகிறது.

எனவே அறத்தின் வழியில் நின்றால் பிணிகள் தோன்றா என்று கூறி முடித்தார் ஆத்ரேய மகரிஷி. சாரம் இதுதான். வைரஸாகவோ, பாக்டீரியாவாகவோ எதுவோ இருக்கட்டும். அதீதமான தாக்கத்திற்குக் காரணம் நம் வினைகள்தான்.


ஒவ்வொரு செயலிலும் அறம் சார்ந்து இருக்கிறேனா என்று ஒவ்வொரு மனிதனும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மறச்செயல்களை மறக்க வேண்டும். இது நமது வைத்யசாஸ்த்ரம் காட்டும் தர்ம சாஸ்த்ர வழி.

இந்தா இந்த பேஷன்ட்டுக்கு ஊசி போட்டு, நாலு மாத்ரை கொடு என்பதான மருத்துவமாக இல்லாமல் இந்த வைத்ய சாஸ்த்ரம் morality, Human values, ethics இவைகளுக்கு மதிப்பு கொடுத்து ஆழமும், அகலமும் சேர்ந்து அலசி நமக்கு ஒரு தீர்வை கொடுத்துள்ளது. எனவேதான் அது சாஸ்த்ரமாக விளங்குகிறது. விசை நம் கையில். எப்படி எப்போது செய்யப் போகிறோம் என்பதும் நம் கையில். அக்னியே எம்மை நல் வழியில் அழைத்துச்செல் என்று வேதம் வேண்டுவது போல் நாமும் ப்ரார்த்திப்போம் என்று கூறி தர்மஸ்வரூபியான ஸ்ரீசரணர்களின் பொற் பாதத்தில் இவ்விதழை சமர்ப்பிக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

C ¸ Á øPa \¢u [ PÒ



அடிமேல் அடிவைத்து முன்னே போவ, ‘‘பதேபதே, என்று சொல்வார்கள்; step by step என்று அர்த்தம். இப்படியே பக்தியில் அடிமேல் அடிவைத்து ஒவ்வொரு ச்லோகத்தின் வழியாக முன்னேற வழி சொல்கிறதாலும் இது ஷட்-பதீ’’ என்று வைத்துக் கொள்ளலாம்.

## சிலேடை மர்மம்

இதிலே ஒரு ச்லேஷை (சிலேடை)யும் இருக்கிறது. ‘‘பதம்’’ என்றால் ‘‘கால்,’’, அல்லவா? ‘‘கால், அல்லவா?’’ ‘‘ஷட்பதீ என்றால் ஆறுகால் கொண்ட ஜந்து’’ என்று அர்த்தம்.

‘‘ஆறுகால்! ஐந்தாவது? விசித்ரமாயிருக்கிறதே’’ என்று தோன்றும்! மநுஷ்யன் இரண்டு கால் பிராணி. மிருகங்கள் நாலுகால் ப்ராணி. எட்டுக்கால் பூச்சி என்று ஒன்று இருக்கிறது. காலே இல்லாத பாம்பு. மரவட்டைக்கு எண்ணி முடியாத கால்கள். ஆறுகால் ஐந்து என்ன?

அதுதான் வண்டு. வண்டுக்கு ஆறுகால்தான் இருக்கும். ஷட், பதம் கொண்டது அது. ஆகையால் ஷட் – பதீ என்றால் வண்டு என்று அர்த்தம். ஷட் – பதீ ஸ்தோத்ரம் என்றால் வண்டு ஸ்தோத்ரம்.

‘ஆறு பதம் (ச்லோகம்) உள்ள இந்த ஸ்தோத்ரத்துக்கு ஏன் வண்டு – ஸ்தோத்ரம் என்று பேர்? இந்த ச்லேஷை என்ன?’ என்று ஆசார்யாள் கடைசியான ஏழாவது ச்லோகத்தில்தான் புதிர் அவிழ்க்கிறார். ஒரு கதை சொல்கிறவர் அதிரி மர்மமாக ஒன்றை ஆரம்பத்தில் சொல்லி விட்டு, அதை உடனேயே அவிழ்த்து விடாமல் கடைசி வரை

மூடி மூடி வைத்து, ஆர்வத்தை ஜாஸ்தியாக்கிக் கொண்டே போய்க் கடைசியில்தான் அவிழ்ப்பார். அதே மாதிரி 'ஷட்-பதீ' என்று ஸ்தோத்ரத்துக்கு டைட்டில் கொடுத்த ஆச்சார்யாளும் ச்லோகம் முடிகிறபோதுதான் இதற்கு ஏன் 'ஆறுகால் ஸ்தோத்ரம்' அதாவது 'வண்டுத் துதி' என்று பேர் கொடுத்தார் என்று விண்டு சொல்கிறார். காவ்யங்களிலும், பக்தி க்ரந்தங்களிலும் ஈடுபட்டவர்களுக்கு, ரஸிகர்களுக்கு, அவர் சொல்லாவிட்டாலும் ஆரம்பத்திலேயே புரிந்து விடும்.

உங்களில் கொஞ்சம் பேருக்கு இப்போதே ஷட்பதீ (வண்டு) என்பதிலுள்ள ச்லேஷை புரிந்திருக்கலாம். புரியாதவர்களுக்கு நானும் ஆசார்யாள் மாதிரியே கடைசியில் தான் புரிய வைக்கப் போகிறேன்?

இப்போது முதல் ச்லோகத்திலிருந்து ஆரம்பிக்கலாம். இந்த முதல் ச்லோகத்தில் எவையெவற்றை வேண்டி ப்ரார்த்தனை பண்ண வேண்டும் என்று நமக்கு ஆசார்யாள் சொல்லிக் கொடுக்கிறார்.

## எதற்கு வேண்டுவது?

பகவானை எதற்காக ப்ரார்த்தனை பண்ண வேண்டும் என்பதில் அபிப்ராய பேதங்கள் உண்டு.

இந்த லோக வாழ்க்கையில் நமக்கு எண்ணி முடியாத கஷ்டங்கள், ச்ரமங்கள், ச்லேசகங்கள், துக்கங்கள் ஏற்படுகின்றன. சரீரக் கஷ்டம், மன சஞ்சலம், பண முடை, பயம், அவமானம் இப்படியாகக் கணக்கேயில்லாமல் அவதிப்படுகிறோம். இவை தீருவதற்கு வேறு வேறு வழிகளைத் தேடுகிறோம். உடம்பு ஸரியில்லை என்றால் டாக்டரிடம் போகிறோம். பணக் கஷ்டம் என்றால் கடன் கொடுக்கக் கூடியவர்களிடம் போகிறோம். ஆவிகள் சேஷ்டை என்றால் மாந்த்ரிகரிடம் போகிறோம். பலவிதமான ப்ரச்னைகள் தீர ராஜாங்க அதிகாரிகளிடம் போகிறோம். இப்படிப் பலபேரிடம் போனாலும், இந்தக் கஷ்டங்கள் தீர பகவானையும் ப்ரார்த்தனை பண்ணிக் கொள்கிறோம். நாம் கஷ்டம் தீர யாரைத் தேடிப் போகிறோமோ அவர்கள் நமக்கு அநுகூலமாக இருப்பதற்கு பகவானை ப்ரார்த்திக்கிறோம். டாக்டர் மருந்துதான் கொடுப்பார். அது நமக்கும் பலிக்க வேண்டுமே! இதற்காக பகவானை வேண்டிக் கொள்கிறோம். ஒருத்தர் ஸஹாயம் செய்வார் என்று அவரிடம் போகிறோம். ஆனால் போகிற வழியிலேயே நமக்கு ஒரு விபத்து வந்து விட்டால் என்ன பண்ணுவது? இதற்காக ப்ரார்த்தனை பண்ணுகிறோம்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சீதை
### பொறுமையின் பெருமை

அவனுடைய தற்பெருமை நிறைந்த வசனத்திற்கு சீதை தன் கணவனைச் சிங்கத்திற்கும் இராவணனை நரிக்கும், பூனைக்கும் ஒப்பிட்டு அடிபணிய மறுத்தாள். சடாயு என்ற கழுகரசனைக் கண்டதும் உதவிக்கு அழைத்தாள். இராவணன் சடாயுவை வெட்டிக் கொன்றான். சீதையை இலங்கையில் தன் அரண்மனையை ஒட்டிய அசோக வனம் என்ற தோட்டத்தில் அரக்கிகளின் நடுவில் சிறைவைத்தான்.



இராவணன் பத்து மாதங்களில் பல வழிகளில் சீதையை ஆசை காட்டியும் மிரட்டிய வண்ணமும் இருந்தான். ஆனால் சீதை இராமன் நினைவாகவே இருந்தாள். தன் பத்தினியை வேறொருவன் கவர்ந்தால் இராவணன் என்ன நினைப்பான் என்று கேட்டாள். அவள் இணங்க மறுத்த போது இராவணன் மேலும் இரண்டு மாத முடிவிற்குள் அவள் தன்னைச் சேராவிடில் அவளைக் கொன்று விடுவதாக அச்சுறுத்தினான். அவன் இதைச் சொல்லும் போது அசோகவனத்தில் ஒரு மரத்தின் கிளையில் அனுமன் என்ற வானரன் ஒளிந்த வண்ணம் இதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மாரீசனைக் கொன்றபின் இராமனும் இலக்குமணனும் சீதையைக் காணாது வருந்தினர். அவர்கள் சீதையை தேடித் திரிந்தபோது சுக்ரீவன் என்ற வானர அரசனையும் அனுமன் என்ற அவனது அமைச்சனையும் கிஷ்கிந்தை என்ற நகரின் அருகில் கண்டனர். அந்த நாட்டிற்குச் சுக்ரீவனை இராமன் அரசனாக்கினான். சுக்ரீவன் அனுமனை இலங்கையில் சீதையைத் தேடுவதற்கு அனுப்பினான்.

இராவணனுடைய மிரட்டலைக் கேட்டும் சீதை விடாப்பிடியாக அவனைத் துச்சமாக எண்ணி கடையோனாகக் கருதுவதை

துணிந்து தெரிவித்தாள். தன்னுடைய தவ வலிமையால் இலங்கையை அழிக்கக் கூடுமாயினும் தன் பதியின் ஆணையின்றி அவ்வாறு செய்ய இயலாது என்றாள். மேலும் அவன் தன்னையும் இலங்கையில் உள்ளவர்களையும் காத்துக் கொள்ள விரும்பினால் இராமனைச் சரணடையைச் சொன்னாள். இலங்கை வேந்தன் அவளைக் கொல்வதற்குக் கெடு வைத்துச் சென்றபின் அரக்கியர் கொடுமை தாங்காது சீதை தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் அனுமன் இருந்த மரத்தை அணுகினாள்.

அனுமன் தன்னிடம் இராமன் கொடுத்த கணையாழியைச் சீதைக்கு அளித்து அவளைத் தேற்றினான். அனுமன் பேருருவம் எடுத்து அவளைச் சுமந்து சென்று இராமனிடம் சேர்ப்பிப்பதாகவும் கூறினான். ஆனால் சீதை அவ்வாறு தான் செல்வது தனக்கும் தன் கணவனின் வீரத்திற்கும் மாசு கற்பிப்பதாகும் என்றுரைத்தாள். தன்னிடமிருந்த சூடாமணியை அடையாளமாகக் கொடுத்து இராமனிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டாள். மேலும் இராமன் ஒரு மாத காலத்திற்குள் தன்னை விடுவிக்காவிடில் தான் உயிர் துறக்கப் போவதாகவும் வற்புறுத்திக் கூறினாள்.

அனுமன் அசோக வனத்தை அழித்த போது அரக்கர்கள் அவனைப் பிடித்து இராவணன் ஆணையால் வாலில் தீ வைத்தனர். இதைக் கேள்வியுற்ற சீதை தீக் கடவுளை வேண்டிக் கொண்டதால் அனுமனுக்கு எந்தத் தீங்கும் நேரவில்லை. மாறாக எரியும் வாலினாலேயே அவன் இலங்கையின் பெரும் பகுதியை தீக்கிரையாக்கினான். பின்பு சீதையின் ஆசியுடன் இராமனிடம் சென்றான்.

இராமன் சுக்ரீவனுடன் பெரும் படையை அழைத்துச் சென்று இலங்கையைத் தாக்கினான். இராவணனையும் பல அரக்கர்களையும் கொன்று இராவணனின் தம்பியாகிய வீபீடணனுக்கு முடி சூட்டினான். சிறை வைக்கப்பட்ட சீதையிடம் வெற்றிச் செய்தியைச் சொல்லப் போன அனுமன் சீதையிடம் அவளை அதுகாறும் துன்புறுத்தி வந்த காவல்தாரிகளான அரக்கிகளைக் கொன்று விட உத்தரவு கோரினான். ஆனால் சீதை மிகுந்த கருணையுடன் அவர்களை மன்னித்து விட்டாள். அவர்கள் இராவணனின் உத்திரவின் பேரிலேயே அவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதால் அவர்களுக்கு அபயம் அளித்தாள்.

விபீடணன் சீதைக்கு ஆபரணங்களையும், உயர்ந்த ஆடைகளையும் அளித்த போது அவள் முதலில் அவற்றை ஏற்க மறுத்து விட்டாள். பின்னர் இராமனின் விருப்பத்திற்கு ஏற்பவே தான் செய்வதாக விபீடணன் கூறியதும் தன்னை அலங்கரிக்க ஒப்புதல் அளித்து சிவிகையில்

இராமன் முன்னிலையை அடைந்தாள். சோகத்திலிருந்து மீண்டு நிற்கும் சீதையைப் பார்த்துத் தான் இராவணனைப் போரில் கொன்றது அவன் செய்த குற்றத்திற்காக அவனைத் தண்டிப்பதற்காகவே என்றும், பத்து மாதங்கள் அவனுடைய சிறையில் வசித்த சீதையைத் தான் மீண்டும் ஏற்றுக் கொள்ள இயலாது என்றும் கூறினான். சீதை அளவற்ற துயரடைந்தாள். தான் குற்றமற்றவள் என்பதை வலியுறுத்தி விட்டு இலக்குமணனை ஒரு சிதையை அடுக்குமாறு ஆணையிட்டாள். இலக்குமணன் இராமனின் ஒப்புதலைப் பெற்று ஏற்படுத்திய கடுங்கனலின் சுடரில் புகுந்தாள். அக்னிதேவன் அவளைச் சிறிதும் தீண்டாமல் இராமனிடம் ஒப்புவித்தான். தேவர்கள் அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். பொறுமையில் பூமியை நிகர்த்தவள் சீதை. பூமியிலிருந்தே பிறந்தவள் அன்றோ!

(தொடரும்)

## ஸனாதன தர்மப் புதிர்கள் ஆகஸ்ட் விடைகள்

1. மாயாபுரீ
2. சப்தவிடங்கர்
3. த்ரிலிங்கம்
4. சாலிவாஹனன்
5. சண்டிகேஸ்வரர்
6. சூடாமணி
7. ஆனந்த ஸாகரஸ்தவம்
8. புகழ் சோழ நல்லூர்
9. ஆஸ்திகர்
10. குமரிகா காண்டம்

## ஸனாதன தர்மப் புதிர்கள் செப்டம்பர் வினாக்கள்

1. பஞ்சாயதன பூஜை செய்யு முறையை விளக்கும் நூல்
2. தாயாருக்கு மட்டும் தர்ப்பணம் செய்யுமிடம்
3. அறிவு அறிபவன், அறியப்படும் பொருள் இதற்கு பெயரென்ன
4. ஸ்ரீசங்கரரின் மஹாவாக்ய விளக்க நூல்
5. பாண்டிய நாட்டை வளமாக்கிய நதி
6. திருக்கருக்கலியல் விடங்கரின் பெயர்
7. பூஜையின் போது மட்டும் ஆராதிக்கப்படும் லிங்கம்
8. சுந்தர்ருக்கு சிவன் ஊன்றுகோல் தந்த இடம்
9. உணவை சாப்பிடும் வகைகள்
10. ஸ்ரீ வைஷ்ணவர்களின் ப்ரசித்தி பெற்ற ஐந்து?


# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அக்ஷய திதியை, சங்கரர் ஜெயந்தி

**வக்ரதும்ட மஹாகாய கோடி சூர்ய ஸம்ப்ரபா**
**நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா**

*குருவே ஸ்ர்வ லோகானாம் பிஷஜே பவ ரோகிணாம்*
*நிதயே ஷர்வ வித்யானாம்*
*ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே நம:*



*சித்திரை மாதத்தில் இருந்து, பங்குனி மாதம் வரையிலே, பல உற்சவங்களை விரதங்களை, பூஜைகளை, விசேஷமாக கொண்டாடி அனுஷ்டானம் செய்து வருகிறோம். அந்த வரிசையிலே இரண்டு முக்கியமான உற்சவங்கள், பண்டிகைகள் சித்திரை மாதத்தில் வருகின்றன. ஒன்று அக்ஷயதிதியை புண்ணிய காலம் இரண்டாவது சங்கர ஜெயந்தி உற்சவம். நம்முடைய தேசத்திலே பக்தியை வளர்ப்பதற்காகவும், சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கக் கூடிய பல்வேறு தர்மங்களை, மனிதனுடைய நல்வாழ்விற்க்காக தர்மம் ஏற்ப்படுத்தப்பட்டு இருக்கிறது.*

*ஒரு மனிதனுடைய சிந்தனை எப்படி இருக்க வேண்டும். சொல் எப்படி இருக்க வேண்டும், செயல்கள் எப்படி அமைய வேண்டும். இதன் மூலமாக தனிமனிதனுடைய வளர்ச்சியும், சமுதாயத்தின் வளர்ச்சியும் ஒரு சேர எப்படி அமைய முடியும் என்பதற்கு அடையாளமாக தர்மம் என்பது ஒரு விரிவான ஒரு ஏற்பாட்டுடன், விசாலமான கண்ணோட்டத்துடன், நல்ல பண்புகளை மனிதர்களின் மனதிலே உருவாக்குவது, தொடர்ந்து அந்த நல்ல குணங்களுடன் வாழ்வது, அந்த நல்ல பண்புகளின் வாயிலாக நல்ல சமுதாயத்தை உருவாக்குவது. அன்பும், அக்கரையும், பக்தியும், கால தர்மம் செய்யக் கூடிய கொடை தர்மமும், பெரியோர்களை மதிப்பது, அவர்களுடைய சொல்களைக் கேட்டு, நல்ல செயல்களிலே ஈடுபடுவது, நம்முடைய கண்களுக்கு*

புலப்படக்கூடிய விஷயங்கள் சில இருக்கின்றன இந்த உலகத்திலே நல்ல விஷயங்கள். கண்களுக்குப் புலப்படாத அல்லது தீவிரமான சாதனைகள், யாகங்கள் மூலமாக,தவங்களின் மூலமாக உணரக்கூடிய நல்ல கருத்துக்களும் இருக்கின்றன. அப்படிப்பட்ட தார்மீகமான, ஆன்மீகமான மனித நேயத்துடன் கூடிய நல்ல பண்புகளை உபதேசிப்பது தர்மத்தின் நோக்கமாக இருந்து வருகிறது.

இதை ஒருநாளிலே சாதிப்பதோ, ஒரு மனிதனாக சாதிப்பதோ கஷ்டம். ஆகவே தினசரி அனுஷ்டானங்களையும் செய்து கொண்டு,விசேஷமான நாட்களிலே, விமர்சையாக நல்ல தர்மங்களைச் செய்து, நித்திய, நைமித்திக என்ற இரண்டு விதமாகப் பிரித்து இருக்கிறார்கள்.

தினசரி நாம் செய்ய வேண்டிய துளசி பூஜை, திலகதாரணம், தீபத்தை ஏற்றி வைப்பது, அவரவர்களுடைய இஷ்ட தெய்வங்களின் நாமாக்களை,பெயர்களை உச்சாடனம் செய்வது, இது போன்ற நித்ய அனுஸ்டானங்கள் ஒரு புறம். சந்தியாவந்தனாதி அனுஷ்டானங்கள் , சமிதாதானம், ஔவ்பாசனம் போன்றவைகள், இது போன்று கோவிலுக்குச் சென்று, வழிபாடு செய்து வருவது, நம்மால் முடிந்த வரையிலே, தீபம் ஏற்றுவதற்கும், நெய்வேத்யதிற்கு உதவியாகவும், அர்ச்சனைகள் செய்வதற்கு உதவியாகவும், பொருட்களை கொவிலுக்கு தானமாக அளிப்பது-இது போன்ற நல்ல செயல்களின் மூலமாக. மனிதனுடைய சொல், செயல் சிந்தனை இவற்றை நல்வழிபடுத்தி புண்ணியம் சம்பாதிப்பதற்கு வழிவகைகள் செய்தார்கள். பொருள்களை சம்பாதிக்கிறோம். வாகனம் போன்ற வசதிகளைப் பெறுகிறோம். உத்தியோகத்திலே உதவியைப் பெறுகிறோம். அது போன்று, மனதளவிலே மனிதன் பக்தியுடன் கூடிய , பக்குவப்பட்ட மனிதர்களாக, மேலும் இறைவனுடைய தொண்டிலே, தன்னை ஈடுபடுத்திக்கொள்வதற்கான மனிதனுடைய வளர்ச்சியாகப் பார்க்கபட்டு, அறம் செய்ய விரும்பு என்று நம்முடைய நீதி நூல்கள் நமக்கு வலியுறுத்துகின்றன. அந்த வகையிலே இந்த அக்ஷய திதியை என்ற புண்ணிய காலமானது பல தர்ம காரியங்களைச் செய்வதற்கும் உகந்த காலமாகக் கருதப்படுகிறது.

நம்முடைய நல்ல சிந்தனைகளை பன்மடங்கு வளர்த்துக் கொள்வதற்கும், செய்யக் கூடிய புண்ணிய காரியங்களின் மூலமாக, சாதாரண நாட்களிலே கிடைக்கக் கூடிய புண்ணியங்களை விட, பல மடங்கு புண்ணியங்களை பெறுவதற்கான வாய்ப்பாகவும், இந்த அக்ஷ்யதிதியின் புண்ணிய காலம் கருதப் பட்டு, அன்றைய தினம் கோவில்களுக்கும், பல நல்ல தர்ம காரியங்களுக்கும், வேத சாஸ்திர வளர்ச்சிக்கும் ,

நம்மால் முடிந்த உதவிகளை, சேவைகளை செய்வதின் மூலமாக,குறைந்து வந்த செல்வத்தை- அக்ஷ்யம் என்றால் குறைவற்றது

மகாபாரதத்திலே,சூரிய பகவானுடைய அருளோடு தௌம்யர் மகரிஷி அவர்கள் உபதேசித்த முறையிலே, பாண்டவர்கள் அந்த அக்ஷயப் பாத்திரத்தைப் பெற்று, காட்டிலே வசித்துக் கொண்டு இருந்த நேரத்திலேயும் , ஆயிரம் கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்யக் கூடிய வலிமையை, சக்தியைப் பெற்றார்கள் என்பது அந்த அக்ஷயம் என்கிற, சப்தத்திற்கு சொல்லுக்கான பொருளை தெளிவாக நமக்கு விளக்குகிறது. காட்டுக்குச் சென்ற நேரத்திலே நல்ல அறினர் பெருமக்கள், தபஸ்விகள் நாங்களும் தங்களுடன் வருகிறோம் என்று சொன்ன நேரத்திலே, இரண்டு கருத்துக்களை தர்மபுத்திரர் சொன்னதாகவும்,; அதாவது ஒன்று -நல்லோர்களை சரியான முறையிலே , நாங்கள் உபசரிப்பது இந்த வனப்பகுதியிலே, சாத்தியமா, அல்லது நல்லவர்களாகிய உங்களுக்கு குறைவு ஏற்ப்பட்டு விடக்கூடாது. நீங்கள் அன்பின் காரணமாக, மரியாதையின் காரணமாக எங்களுடன் இருக்க விரும்பினாலும், உங்களுடைய தினசரி அனுஷ்டானங்களுக்கும். உங்களை உபசரிப்பதிலேயும் குறைவு வந்து விடக்கூடாது. இரண்டாவது, அங்கு இருக்கும் துரியோதனன் போன்றவர்கள் உங்களை நல்ல விதமாகவே கவனித்துக் கொள்வார்கள். யாரையும் குறை சொல்லாத மனப்பான்மை, எல்லோரிடத்திலும் இருக்கும் நல்லதைப் பாராட்டும் தன்மையின் காரணமாக, தர்ம புத்திரர் தரப்பிலிருந்து சொன்னதைக் கேட்ட அறிஞர்களும், தபஸ்விகளும், நல்ல குணமும், நல்ல சுபாவமும் இருக்கும் உங்களிடம் நாங்கள் இருக்க விரும்பிகிறோம். நீங்கள் காட்டிலே வசித்தாலும், உங்களுடன் வாழ்வதைத்தான் நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். ஆசைப்படுகிறோம் என்று சொன்ன நேரத்திலே, குல குருவான தௌம்யர் மகரிஷியுடைய அறிவுறுத்தல்படி, சூரிய பகவானை உத்தேசித்து, பிரார்த்தனை செய்து, ஜபங்கள் செய்து, அந்த தவத்தின் பயனாக, அக்ஷயப் பாத்திரம் கிடைக்கப் பெற்று, அதன் மூலம் காட்டிற்கு வந்த ஆயிரம் கணக்கான மக்களையும், மகரிஷிகளையும் கௌரவிக்கக் கூடிய, உபசரிக்கக் கூடிய சக்தியை மனிதர்கள் மற்றுமல்ல ,பகவானே வந்து சோதனையாக வந்த நேரத்திலேயும், கிருஷ்ண பரமாத்மாவையும் திருப்தி அளிக்கக் கூடிய பலத்தை, சூரிய பகவானுடைய அருளால், இந்த அக்ஷயப் பாத்திரத்தைப் பெற்றார்கள். இன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமையும் சேர்ந்து இருக்கிறது. சூரிய நமஸ்காரம், யசுர் வேதத்திலே இருக்கக் கூடிய சூக்தங்களைக் கொண்டு, நூற்றுக்கும் மேல் செய்யக் கூடிய நமஸ்காரங்களை-நமச்காரப் ப்ரியஹா பானுஹு - ஒவ்வொரு தெய்வத்தை, ஒவ்வொரு

விசேஷமான வழிபாட்டின் மூலமாக நாம் திருப்தி செய்து, அனுக்ரகத்தைப் பெற்று வருகிறோம். அதிலே, நமஸ்காரப் ப்ரியோ பானுஹு என்பதாக, நமச்காரங்களின் மூலமாக, விசேஷ அனுக்ரகங்களை அளிப்பவர் சூரிய பகவான். இந்த சூரிய நமஸ்கார நிகழ்ச்சியும் இன்றைய தினம் சேர்ந்து இருப்பது விசேஷம். ஆகவே இன்றைய தினத்திலே, நல்ல தான தர்மங்களை செய்வதற்கும் உகந்த நாளாக இருப்பதனாலே , அவரவர்கள் அவரவர்கள் இருக்கும் இடத்திலேயே சங்கல்பத்தை செய்து கொண்டு, பிறகு சௌகரியப் படக்கூடிய நாட்களிலே, இந்த தர்ம காரியத்தை விரிவாகச் செய்து, அவரவர்கள் இருக்கக்கூடிய இடத்திலே இன்னும் என்ன நல்ல பணிகளுக்கு உதவி செய்ய முடியுமோ, அதன் மூலம் நல்ல புண்ணியத்தைப் பெற்று, இந்த அக்ஷயத் திதி புண்ணிய காலத்தை நல்ல விதமாக அதைக் கடைபிடித்து இறைவனுடைய அருளையும், புண்ணியத்தையும் பெற வேண்டும்.

ஜெய ஜெய சங்கர , ஹர ஹர சங்கர

## திருவாவடுதுறை ஆதீனம், ஆதீனகர்த்தர் அவர்களின் கடிதம்

ஸ்ரீ காமகோடி பிரதீபம் மலர் 9 இதழ் 8.

-----

மக்களின் வாழ்வு தெய்வீக வளம்பெறப் பல சிறந்த ஆன்மீகச் செய்திகளைத் தாங்கி 'ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்' இதழ் வெளிவருதல் மகிழ்ச்சிக்குரியது.

நிகழும் சார்வரி வருடம் ஆடி – ஆவணி மாதத்திற்கான இதழ் பார்வையிடப் பெற்றது. அதனில் ஆசிரியர் பக்கம் பகுதியில் " நமது ஸ்வதந்த்ரமும் பதிக ஸம்பந்தமும் " என்னும் தலைப்பின் கீழ் நம் பாரததேசம் சுதந்திரம் பெற்ற சமயத்தில் நடைபெற்ற நிகழ்வு விளக்கப் பெற்றுள்ளது. அவ்விளக்கத்தில் சுதந்திர நாளில் பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்களுக்குச் செங்கோல் வழங்கியது திருப்பனந்தாள் மடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மூதறிஞர் இராஜாஜி அவர்களிடம், 1947-ஆம் வருடம் ஆகஸ்டு 15ஆம் நாளில் நம் நாட்டிற்குச் சுதந்திரம் வழங்கும் நிகழ்வை எந்த முறையில் நடத்துவது என ஆலோசனை கேட்கப் பெற்றது.

அப்போது இராஜாஜி அவர்கள் "நம் நாட்டில் பழைமையான ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம். அதன் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் செங்கோல் வழங்கி அரசை மாற்றலாம் " என்று கருத்துத் தெரிவித்தார். அப்படியே நடத்த முடிவு செய்யப் பெற்றது.

அதன்படி திருவாவடுதுறை ஆதீனத்தில் தயார் செய்யப்பெற்ற தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் செங்கோலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் மூத்த தம்பிரான் அவர்கள் பெற்றுக் கொண்டு ஓதுவா மூர்த்திகளுடன் டெல்லி சென்று கோளறு பதிகத்தின் திருக்கடைக்காப்பு (பலச்ருதி) பாடலைப் பாடி அதனில் ' அரசாள்வர் ஆணை நமதே ' என்னும் ஈற்றடி முழங்க அந்தச் செங்கோலைப் பாரதப் பிரதமர் திரு. நேரு அவர்களிடம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

☎ : 044-27222115
Acts : 044-27224236
Fax : 044-27224305

உ

|| Sri Chandramouleeswaraya Nama: ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

Date : ...............................

01-09-2020
Kanchipuram

We are very sad to learn the news of sudden demise of former President of India, Shri Pranab Mukherjee, on 31st August, 2020. Shri Pranab Mukherjee was a scholar of par excellence in various fields. In him, we had a versatile personality namely a good Teacher; Economist; Administrator; Learned Lawyer; Leader and a Central Minister of important portfolios like—Foreign Affairs, Defence, Finance, Commerce etc. and above all – he was a popular Statesman. In his 50 years of public life, he served and guided the nation untiringly and without compromising the values of public life. He was most trusted leader of great persons like Mrs. Indira Gandhi & Shri P.V. Narasimha Rao.

We recall and cherish his memorable vist, as Hon. President of India to Sri Kanchi Kamakoti Sankara Mutt, Kanchipuram where his respect and admiration towards the values of our culture and traditions were evident. Subsequently, as former President of India, Shri Mukherjee visitd the Sankara Mutt, showing his deep involvement and respects to the Mutt and Shri Shankaracharya Swamigal.

We express our heartfelt condolences to the members of the bereaved family.

Shanti! Shanti! Shanti!

For, Sri Kanchi Kamakoti Peetam,
Jagadguru Sri Sankaracharya Swamigal Srimutt.

Srikaryam & Agent

# ஜெய பேரிகை கொட்டிய ஜெயேந்திர குரு

*அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்*

*இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே! என்றார் தாயுமானவர்.*

*ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் ஆகிய மூன்றிலும் மையப் புள்ளியாகத் திகழ்வது தன்னலமற்ற தூய்மையான தொண்டே ஆகும். மனத்துக் கண் மாசு இன்றி மக்கள் தொண்டு புரிவதே நமது மகான்கள் காட்டிய நெறி ஆகும்.*

*ஆழ்வார்கள், நாயன்மார்கள், அருளிச் செய்த பதிகங்களும், அவர்களின் வாழக்கை வரலாறும் மக்கள் தொண்டை முன்னிறுத்தியே நிகழந்திருக்கின்றன.*

*ஆதிசங்கரின் வாழ்க்கையும், அவர் நமக்கு வகுத்தளித்த உபதேசங்களும் மனிதம் வாழவே வழிகாட்டுகின்றன.*

*நமது புராணங்களும், இதிகாசங்களும் மக்களுக்காவே எழுந்தவை. பரப்பிக் கொண்டிருக்கும் நமது இந்து சமயம் மனிதனின் அகமும், புறமும் நலம்பெற பல்வேறு வழிமுறைக நமக்குத் தந்துள்ளன.*

*சைவ சமய நாயன்மார்களில் காலத்தால் முற்பட்டவர் திருமூலர். அவர் இதனை மிகத் தெளிவாகவே நமக்கு காட்டுகிறார்.*

*படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் பகவற்கு அது ஆமே!*

*ஆம் மக்களுக்குச் செய்யும் தொண்டு மகேசனுக்குச் செய்யும் தொண்டு என்பதில் எவ்வித மாறுபாடும் இருக்க முடியாது!*

*நாயன்மார்களில் ஒருவர் விறண்மிண்ட நாயனார். அவர் சிவபெருமானை உள்ளத்தில் நிறுத்தி வழிபடுபவர். ஆனால் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதே சிறந்த சிவத் தொண்டு என வாழ்ந்து வந்தவர்.*

*ஒருமுறை திருவாரூர் தியாகேசர் சன்னிதி முன்பாகத் திருத்தொண்டர்கள் புடை சூழ அவர் அமர்ந்திருந்த போது, அவ்வழியே வந்த சுநதரர், தொண்டர்களைப் பற்றிக் கவலைப்படாமல் நேரடியாக இறைவனிடம் சென்றார். இதைக் கண்ட விறண்மிண்டார் திருத் தொண்டர்களுக்கு வன்தொண்டனும் புறம்பு; அவனை ஆண்ட சிவனும் புறம்பு!*

என்று ஓங்கிக் குரல் கொடுத்தார். சுந்தரர் இறைவனிடம் சென்று முறையிட்டார். சிவபெருமானும், 'ஆம் சந்தரா! தொண்டும், தொண்டர்களுமே இவ்வுலகில் உயர்ந்தவர்கள்.' எனவே நீ முதலில் அவர்களைப் பற்றிப்பாடு என அடியெடுத்துக் கொடுத்தார்.

இறைவன், 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்!' எனத் தனது வாய்மொழியாகச் சொல்ல, அதை முதலடியாக்க் கொண்டு சுந்தரர் பாடியதே திருத்தொண்டத் தொகை ஆகும். பின்னாளில், சேக்கிழார் பெரியபுராணம் பாடக் காரணமாக அமைந்தது இத்திருத் தொண்டத் தொகையே ஆகும். ஆம்! தூய்மையான தொண்டு என்பதையே இறைவன் விரும்புவான் என்பதையே இந்நிகழ்ச்சி நமக்குக் காட்டி நிற்கின்றது.

ஔவையாரிடம் 'உலகத்தில் எது பெரிது?' என்று வினவுகின்ற போது, ஔவை ஒவ்வன்றாகப் பதில் சொல்லிக் கொண்டே வருவாள். பதிலுக்கு மறுப்பும் வரும். கடைசியில் 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ' என்பார்.

பெரிது! பெரிது! புவனம் பெரிது !
புவனமோ நான்முகன் படைப்பு !

எனத் தொடங்கும் அப்பாடலில், புவனம் பெரிது; புவனமோ நான்முகன் படைப்பு; நான்முகனோ திருமால் உந்தியில் வந்தோன்; திருமாலோ திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவன்; கடலோ குறுமுனியின் கையில் அடங்கும்; குறுமுனியோ கலசத்தில் பிறந்தவன்; கலசமோ புவியில் சிறுமண்; புவியோ ஆதிசேஷனுக்குத் தலைப் பாரம்; ஆதிசேடனோ உமையவள் சிறுவிரல் மோதிரம், உமைய இறைவனில் ஒரு பாகத்தில் ஒடுக்கம், இறைவனோ தொண்டர்களின் உள்ளத்தில் ஒடுக்கம். அந்த தொண்டர்களின் பெருமை சொல்லவும் பெரிதே!' என்பார்.

'தூய உள்ளம், தொண்டுள்ளம் என்பது பக்தி நெறியில தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்களிடம் ஏற்படுகின்ற உணர்வாகும்.

பெரிய புராணத்தில் வருகின்ற அப்பூதி அடிகளாரின் சரித்திரம் இதைத்தானே நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

திங்களூரில் மறையவர் குலத்தில் தோன்றியவர் அப்பூதி அடிகள். அவர் திருநாவுக்கரசரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் மீது பேரன்பு பூண்டவர். அந்த அன்புக்கு அறிகுறியாக அவர் தம் வீட்டிலுள்ள பொருள்கள், பிள்ளைகள், பசுக்கள், தான் அமைத்த திருமடம், தண்ணீர் பந்தல் எல்லாவற்றுக்கும் 'திருநாவுக்ரசு' என்ற பெயரையே சூட்டி, அப்பெயராலேயே திருத்தொண்டு செய்து வந்தார்.

பல திருப்பதிகளையும் வழிபட்டுச் சென்று கொண்டிருந்த திருநாவுக்கரசர், திங்களூர் வழியே சென்றபோது, தண்ணீர்பந்தலில் தன் பெயர் இருப்பதைப் பார்த்தார். இப்பந்தல் அமைத்தவர் யார் எனக் கேட்டு, அப்பூதி அடிகளைச் சென்று பார்த்தார். அப்பூதி அடிகளும் இவர் ஒரு சிவனடியார் என எண்ணி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வரவேற்றார்.

திருநாவுக்கரசர் அவரிடம், தண்ணீர்பந்தலுக்கு உங்களின் பெயரை வைக்காமல் இன்னொருவரின் பெயரை வைக்கக் காரணம் என்ன என வினவிய போது, என்ன கேள்வி கேட்டீர், பல்லவ மன்னனும் சமணர்களும் திருநாவுக்கரசருக்குத் தாங்கவொண்ணாத கொடுமைகளை இழைத்த போது, திருத்தொண்டாலே இம்மையிலும் பிழைக்கலாம், என்பதைக் கேள்விப்பட்டதும், அவர் அடைந்த மகிழச்சிக்கு அளவே இல்லை. பின்னர் அவருக்கு திருவமுது படைத்தும், இலை பறிக்கச் சென்ற அவரது மகன் மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டி இறந்த்தும், திருநாவுக்கரசர் சிவபெருமானை வேண்டி 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, இறந்த அவர் மகனை உயிர்ப்பித்தும் வரலாறு ஆகும்.

ஆம்! என்னதான் இன்னல்கள் சூழந்த போதும், இறைவனையே எண்ணி திருத்தொண்டு செய்யும் போது இம்மையிலும் மறுமை காணலாம்! என்பதற்கு பெரியபுராணத்தில் அமைந்துள்ள அப்பூதி அடிகள் வரலாறே சான்றாகத் திகழ்கிறது.

இறைவனை, பக்தியுடன் கூடிய தொண்டிற்குத்தான் முன்னுரிமை தருவான் என்பதற்கு இன்னுமொரு நிகழச்சியினையும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

திருநாவுக்கரசர் பக்தியுடன், உழவாரப் பணியையும் செய்து வருபவர். அவரை விட வயதில் மிகச் மிகச் சிறிய ஞானக் குழந்தை திருஞான சம்பந்தர் ஆவார். இருவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள்.

ஒருமுறை நாட்டில் மிகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஈருவரும் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் தங்கியிருந்தபோது, இறைவன் இருவருக்கும் பொற்காசுகள் அளித்தார். திருநாவுக்கரசருக்கு படிக் காசும், ஞான சம்பந்தருக்கு வட்டக் காசும் வழங்கினார். படிக்காசினை உடனே கடையில் மாற்றிவிடலாம். ஆனால் வட்க் காசினை மாற்றக் கொஞ்சம் கால தாமதம் ஆகும்.

இறைவன் ஏன் நாவுக்கரசருகுகு படிக் காசும், ஞானசம்பந்தருக்கு வட்டக் காசும் வழங்கினான்? இங்கே தான் தொண்டின் பெருமை இருக்கின்றது. திருநாவுக்கரசரைச் சூழ்ந்திருக்கும் தொண்டர்கள், தொண்டாற்றுகின்றனர். எனவே அவர்கள் பசித்திருக்கக் கூடாது எனக் கருதிய இறைவன், உடனே மாற்றத்தக்க படிக்காசினை நாவுக்கரசருக்கு அருளினார்.

ஆம்! பக்தியுடன் கூடிய மக்கள் தொண்டிற்கே முன்னுரிமை என்பது இந்நிகழ்ச்சியின் மூலம் புலப்படுகின்றது அல்லவா? அதன் பின்னர், ஞானசம்பந்தர், இறைவனிடம் 'வாசி தீரவே காசு நல்குவீர்!' எனப் பதிகம் பாடி முறையிட்டார் என்பது பெரியபுராணம் கூறும் செய்தி ஆகும்.

அப்பூதியடிகளைப் போல இறைவனிடமும், அவரின் அன்புக் குழந்தையாகிய ஞானசம்பந்தரிடமும் பேரன்பு பூண்டவர் சோழக்குலக் கொடி, பாண்டிமாதேவி மங்கையர்கரசியார் ஆவார். அவர் தமது அமைச்சர் குலசிறையாரின் உதவியோடு செய்த தொண்டுக்கு ஈடு உண்டோ? ஞானசம்பந்தரை பாண்டிய நாட்டிற்கு அழைத்து, அரசனையும், நாட்டையும் உய்விக்கச் செய்த பேரரசி அவர். சேக்கிழார் மங்கையர்க்கரசியை, வளவர்கன் பாவையை 'தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை' என்கிறார்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்கொழுந்து வளைக்கை மானி செங்கமலத் திருமடந்தை கன்னி நாடார் தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை என்பது எவ்வளவு பெரிய சமயத் தொண்டு!

சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரரும் இறைவன் திருவருளால் ஒருங்கிணைந்த போது, அவர்களின் தூய தொண்டினால் இந்நாடு எவ்வளவு மேன்மையுற்றது என்பதை நாம் பெரியபுராணத்தை படிக்கும் போது உணர முடியும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பக்தியின் படிநிலைகளில் முதலாவது அமைவது சரியையே ஆகும். கிரியை என்ற முறையும், யோகம் என்ற செடியும், ஞானம் என்ற கனியும் 'சரியை' என்ற வித்திலிருந்தே தோன்ற முடியும்.

'இறை ஞானத்தின் வித்து என்பது மக்கள் தொண்டே!' என்பதையே நமது இந்து மதம் பல நிலைகளிலும் விளக்கி நிற்கின்றது.

வாழையடி வாழையாக பூரண ஞானம் பொலிந்த நமது இந்தியத் திருநாட்டில் இந்து சமயத்தின் எழுச்சிக்காக அடிகோலியவரே ஆதிசங்கரர். ஆதிசங்கர்ரின் வழியில் அத்வைத வேதாந்த சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பி ஆண்டாண்டு காலமாக இந்து தரும நெறியைப் பரப்பி வருவதுதான் காஞ்சி சங்கர மடம் ஆகும்.

'எல்லா உயிர்களிலும நானேயிருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான்!'
எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் !
இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் ! ஆம் !

இந்தியா உலகிற்களிக்கும் என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். எல்லாரும் ஞான வெளிச்சம் பெற எந்நாளும் வழிகாட்டிக் கொண்டிருப்பது காஞ்சி காமகோடி பீடம் ஆகும்.

வாழும் தெய்வமாக நமக்கு என்றென்றும் வழீகாட்டிக் கொண்டிருப்பவர் காஞ்சி மஹா பெரியவர் ஆவார். அவர் மிகப் பெரிய ஞான விருட்சம். அமைதியாகப் பொங்கிப் பெருகும் நீரூற்று போல அவர் அருளமுதத்தை நமக்கு வழங்கியவர். சூரியனை மையமாகக் கொண்டு பூமி சுழல்வதைப் போல, அந்த ஞான சூரியனை மையமாகக் கொண்டு இந்த பாரத பூமி வலம் வந்த்து என்று தான் சொல்ல வேண்டும்.

அவரது வழியில் காஞ்சி காமகோடி பீடத்தின் 69 ஆவது ஜகத்குருவாக விளங்கியவர் தான் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். சங்கர மடத்தில் நடைபெற்று வந்த வழிபாட்டு முறைகளையும் மரபுகளையும ஜனரஞ்சமாக மாற்றியவர் ஜெயேந்திரர் ஆவார்.

காவி உடை தரித்த புரட்சியாளராக அவர் பணியாற்றினார். அவர் மக்களைத் தேடிச் சென்றார். முழு வயிறு காணாமல், முதுகெலும்பு முறிய பாடுபட்டு வாழ்வின் சுவை காணாமல், வலியோரின் பகடைக் காய்களாகத் திகழந்த அடித்ட்டு மக்களை அவர் தேடிச் சென்றார். இமயம் முதல் குமரி வரை அவரது ஆன்மீகப் புதுப் பாதையின் சுவடுகள் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

சங்கர மடத்தின் மூலம் பல கல்விக் கூடங்களை அவர் நிறுவினார். இந்து மத நெறிகளை வளர்க்கும் கலைக் கோயில்களாக அவை வளர்ந்தன.

'ஜன கல்யாண்' என்ற அமைப்பின் மூலம் அவர் எல்லா மக்களையும் ஒன்றிணைத்து சங்கர மடத்தின் மூலம் பல மருத்துவமனைகளும் கண் மருத்துவமனைகளும் எழுந்தன.

மாணவர்களையும், இளைஞர்களையும் அவர் ஈர்த்தார். பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளும், கலைப் போட்டிகளும் நிகழ்ந்தன. நாளைய உலகின் நம்பிக்கை நாற்றங்கால்களாக அப்பணிகள் விளங்கின. காலத்திற்கேற்றவாறு நாம் மாற வேண்டும். நம் கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், மக்கள் நம்மை நம்ப வேண்டும். அப்படியென்றால் நமுது மக்கள் பணியின் மூலமே அதை நிரூபிக்க வேண்டும் என்று செயல்பட்டார்.

'ஜெய பேரிகை கொட்டடா ! கொட்டடா !' என்று எங்கும் ஜெய பேரிகை கொட்டியவர் அவர்.

'பாபர் மசூதி - ராம ஜன்ம' இடப் பிரச்சனையில் இந்தியாவுக்கே வழிகாட்டிய வழிகாட்டியாக திகழ்ந்தார். தனது மக்கள் சேவையில் பெரும் பங்கினை, நல்லமைதிக்காக செலவிட்டவர்.

வலுகட்டாயமாக மதமாற்றம் செய்வதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிகழச்சிக்குரிய அடிப்படைக் காரணம் என்ன? என்பதை எண்ணிப் பார்த்து அதைக் களைய முற்பட்டார்.

மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் இறைவனின் பேர்ருளைப் பெறலாம் என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர் ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

புன்னகை பூக்கும் பார்வை
பொறுமையே காட்டும் போக்கு !
தன்னையே மக்கள் வாழ
தந்திட்ட புதிய பாதை !
அன்னையாய் வாழந்து நின்றார்
அனைவரும் போற்ற வாழ்ந்தார் !
தன்னிகர் இல்லா குருவே
தலை தாழந்தி வணங்கு கின்றேன் !
காஞ்சியில மடத்தைக் காத்து
கருணையால் அறத்தைக் காத்து !
ஏங்கிடும் ஏழை காதுது
எங்குமே அறத்தைக் காத்து !
ஓங்கிடும் இந்து மேன்மை
உயரவே காத்து காத்து !
தாங்கினாய் தொண்டால் நீயே
தயையுடை சரஸ்வதி குருவே !
என்றும் எந்நாளும் அவரை வணங்குவோம்.

# உள்ளும் புறமும்

*ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி ஆசார்யாள்*



மநுஷ்யனாகப் பிறந்த ஒவ்வொருத்தனும் ஓயாமல் அலைச்சலான அலைச்சல் அலைந்து கொண்டிருக்கின்றானே எதற்காக? ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத்தான். வெளியிலிருக்கிற வஸ்துக்களிடம் இவனுக்கு ஆசை. அவற்றைப் பெறவே அலைகிறான். ஒன்று கிடைத்து விட்டாலும் போதவில்லை. இன்னொன்றுக்கு ஆசைப்படுகிறான். அதைத் தேடி ஓடுகிறான். இவனுக்குச் சாந்தி என்பதே ஒரு நாளும் இல்லை.

வெளியில் இருக்கிற வஸ்து வந்தால் தான் சந்தோஷம். ஆனந்தம் என்று துரத்திக் கொண்டே இருப்பவனுக்குச் சாந்தி எப்படி வரும்? வெளியில் இருப்பது நம் வசத்தில் இருப்பதல்ல. அது வந்தாலும் வரும். போனாலும் போகும். அதை நம் வசப்படுத்திக் கொண்டதாக நினைத்தபோதே கைவிட்டுப் போகக்கூடும். நமக்கு அந்நியமான வெளியிலிருந்து ஆனந்தத்தை நிரந்தரமாகச் சம்பாதித்துக் கொள்வது நடக்காத காரியம். அது சாந்தியைக் கெடுக்கிற ப்ரயத்தனம் தான்.

மநுஷ்யன் புறத்தில் ஆனந்தத்தைத் தேடிக் கொண்டு போவதற்குக் காரணம் அவன் உள்ளுக்குள் தானே ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதுதான். ஆனால் மாயையால், தானே ஆனந்த ஸ்வரூபம் என்பதை மறந்து விட்டிருக்கிறான். இருந்தாலும் இவனுடைய ஸ்வபாவமே ஆனந்தமானபடியால் இவனுக்கு ஆனந்தம் அடைய வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. மநுஷ்யர்களில் எவராவது ஆனந்தத்தைத் தேடாமல்

துக்கத்தைத் தேடிப் போகிறவர் உண்டா? ஆனாலும் அந்த ஆனந்தம் உள்ளே இருப்பதை அறிந்து சாந்தத்தில் அதை அநுபவிக்காமல், வெளியிலே ஆனந்தத்தைத் தேடித் துரத்திக் கொண்டே போய்ச் சாந்தியை ஓயாமல் கெடுத்துக் கொள்கிறார்கள். தன் நிஜ ஸ்வரூபம் என்ன என்று ஒருவன் அம்பாளின் கிருபையால் பிரார்த்தித்து ஆத்ம தியானம் செய்து பார்த்தால், தானே பூரண ஆனந்த வஸ்து என்று தெரிந்து கொள்வான்.

இவனுடைய இயல்பான உள் ஆனந்தம் மகா சமுத்திரம் மாதிரி இருக்கிறதென்றால், இவன் இப்போது புறத்தில் தேடி ஓடுகிற வஸ்துக்களிடம் கிடைக்கிற ஆனந்தமெல்லாம் ஒரு திவலை மாதிரி தான். இதை ஒருத்தன் உணர்ந்து விட்டால் அப்புறம் வெளி இன்பத்தைத் தேட மாட்டான். தன்னைத் தானே அநுபவித்துக் கொண்டு ஆனந்த சமுத்திரமாக இருப்பான். சமுத்திரம் இருக்கிற இடத்தில் இருந்தாலும் அதனிடம் நதிகள் வந்து விழுகின்றன அல்லவா? அப்படியே ஆசைகள் இவனிடம் வந்து சமுத்திரத்தில் நதிகள் விழுந்து மறைவது போல் மறைந்தே போய்விடும். 'அபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம் சமுத்ரம்' என்று கீதை சொன்ன மாதிரி பேரின்பக் கடலாக நிறைந்து, அசைவதற்கு இடமே இல்லாத அளவுக்கு எங்கும் நிறைந்து, அசையாமல் பரம சாந்தமாக நிற்பான். தேவேந்திர பதவியின் ஆனந்தம் கூட இந்த ஆத்மானந்தக் கடலில் ஒரு துளிதான் என்கிறார். ஸ்ரீபகவத் பாதர்கள் 'யத்ஸெக்யாம்புதி' லேச லேசத இமே சக்ரா தபோ நிர்விருதா:?

பதவி, பணம், ஸ்திரீ - புருஷாள், கௌரவம், பப்ளிஸிடி என்றிப்படி வெளியிலிருந்து நமக்கு ஆனந்தம் கிடைப்பதாக எண்ணிக் கொண்டு ஓயாமல் யத்தனம் செய்வது அத்தனையும் சமுத்திரமாக இருக்கிற நாம் அதை அறியாமல் ஒரு சொட்டு ஜலத்துக்காகத் தவிக்கிற மாதிரிதான். வெளிப்பொருள் எதுவோ கிடைக்காததால் நமக்குக் குறை வந்துவிட்டதாகத் துக்கப்படுவது சுத்தத் தப்பு. நமக்குக் குறையே இல்லை. நமக்குள் நாமே பூரண வஸ்து. நமக்கு அந்நியமாக வெளி என்றே ஒன்று இல்லை. வெளியிலே இருக்கிற அத்தனை ஆனந்தமும் நம்முள்ளேயே அடக்கம். 'தானாக வெளியிலிருந்து எது வந்தாலும் வரட்டும். சமுத்திரம் நதிகளை அடக்கிக் கொள்வது போல் அவற்றையும் உள்ளே இருப்பதோடு சேர்த்துக் கொள்வோம். எதுவும் வரவில்லை என்றால் பாதகமில்லை. உள்ளே இருக்கிற பரமாத்ம வஸ்துவின் லேசந்தான் வெளியில் இருப்பதெல்லாம்' என்கிற தெளிவோடு எப்போதும் இருக்க முயல வேண்டும்.

***ஸ்ரீ காமகோடி ப்ரதீபம், ஜனவரி 1985***

# புரட்டாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 22/09/2020 | செவ்வாய் | அனுஷம் தேர் |
| 22/09/2020 | செவ்வாய் | அனுஷம் பாராயணம் |
| 24/09/2020 | வியாழன் | மூலம்தேர் |
| 26/09/2020 | சனி | உத்ராடம் தேர் |
| 26/09/2020 | சனி | உத்ராடம் பாராயணம் |
| 27/09/2020 | ஞாயிறு | ஏகாதசி |
| 28/09/2020 | திங்கள் | துவாதசி |
| 28/09/2020 | திங்கள் | அவிட்டம் தேர் |
| 28/09/2020 | திங்கள் | அவிட்டம் பாராயணம் |
| 29/09/2020 | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| 01/10/2020 | வியாழன் | பௌர்ணமி பூஜை |
| 13/10/2020 | செவ்வாய் | ஏகாதசி |
| 14/10/2020 | புதன் | துவாதசி |
| 14/10/2020 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 18/09/2020, 25/09/2020, 02/10/2020, 09/10/2020 -16/10/2020 வெள்ளிக்கிழமை பூஜை | | |




# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின்
துயர் தீர்க்கும் "**இலவச காப்பகம்**"

குரு பக்தியில் தன்னிகரில்லாதவர் -
தவசீலர் - **அன்பே உருவானவர்** - ஏழை பங்காளர் -
அகிலம் போற்றும் நல்லவர் - நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட்
உருவாக்க பணித்தவர் - **நமது குருநாதர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் பிறந்த நாளான 5.8.2020 அன்றே, அவர்
மிகவும் பாடுபட்டு முயற்சி எடுத்த ஸ்ரீ ராமபிரானின் ஆலயம் உலகம்
வியக்கும் வண்ணம் அயோத்தில் அமைந்திட அடிக்கல் நாட்டப்பட்டது;**
புனிதம் நிறைந்த அந்நாளே **ஸ்ரீ மாதா டிரஸ்ட்** தனது
சேவைபயணத்தில் 20 ஆண்டுகள் முடித்து 21-ஆம் ஆண்டில்
அடியெடுத்து வைக்கும் பொன்னாளாக அமையப்பெற்றது
நமது **காஞ்சி மாமுனிவரின்** அருளாசியே...!!

ஸ்ரீ மாதா டிரஸ்ட்




ஸ்ரீ மாதா டிரஸ்ட்

ஸ்ரீ மடத்தில், நம் நெஞ்சில் நிலைத்து வாழும் ஸ்ரீ காஞ்சி மாமுனியின்
திருவுருவச் சிலையை தரிசிக்கும் **ஸ்ரீ மாதா டிரஸ்ட்**
நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன்
அறங்காவலர் திரு வளசை ஜெயராமன்

**ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் ஜெயந்தி விழாவினை** சிறப்பிக்கும் வகையில் ஸ்ரீ மடத்தில் அர்ப்பணிப்புடன் பொறுப்பு வகிப்பவர்களுக்கும், ஓய்வு பெற்ற மற்றும் தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்கும் தரமான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு, வேஷ்டி–சேலை மற்றும் சிறிதளவு நிதியுதவி ஆகியவற்றை **ஸ்ரீ பெரியவா** அவர்களின் பரிபூரண நல்லாசி பெற்றவரும், ஆத்மார்த்த சிஷ்யருமான, ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 5.8.2020 அன்று ஸ்ரீ மடத்தில் வழங்கி மகிழ்ந்தார்.



ஜெய ஜெய சங்கர...

தனது தர்ம செயல்களின் மூலம் "**மனிதநேயமே மாசற்ற தொண்டு**" என்று நமக்கு போதித்த, இந்நூற்றாண்டின் இணையற்ற தவஞானி ஸ்ரீ பெரியவா அவர்களின்

**அதிஷ்டானம்**

ஹர ஹர சங்கர...









Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST Bank Name : INDIAN OVERSEAS BANK

Gandhi Nagar, Chennai-20. Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

DONATIONS TO OUR TRUST IS EXEMPTED U/S.80 (G) OF THE INCOME TAX ACT.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel : 044 - 2442 0727, 4266 1687

9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# ஸ்ரீ முகாம் நிகழ்ச்சிகள்

## வ்யாஸ பூஜை

ஸ்ரீ மடம் முகாம் தேனம்பாக்கம் சிவாஸ்தான வளாகத்தில் மார்ச் மாதம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த வருடத்திய வ்யாஸ பூஜா மற்றும் சாதுர்மாஸ். வ்ரதங்களை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தேனம்பாக்கத்திலே அனுஷ்டித்தார்கள். 05.7.2020 பௌர்ணமி அன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சார்வரி வருஷத்திய வியாஸ பூஜையை வேதோக்தமாக வழக்கம்போல் செய்தார்கள். தற்சமயம் நிகழும் சூழ்நிலையை உத்தேசித்து வெளியூர் பக்தர்கள் பொதுவாக அனுமதிக்கப்படவில்லை. இந்த வியாஸ பூஜை You Tube மூலம் பக்தர்களுக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு, ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து பயனடைந்தார்கள். அன்று முதல் செப்டம்பர் மாதம் 2ம் தேதி வரை சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் பஞ்சாங்க சதஸ், அத்வைத சதஸ், அக்னிஹோத்ர சதஸ் ஆகிய பல்வேறு சதஸ்ஸுகள் நடைபெற்றது.



**பஞ்சாங்க சதஸ்**

வரும் பிலவ வருஷத்திற்கான பஞ்சாங்க வ்ரத உத்ஸவாதிகளை நிர்ணயம் செய்வதற்கான பஞ்சாங்க சதஸ் ஜுலை மாதம் 24ந் தேதி முதல் 26ம் தேதி வரை நடந்தது. இந்த சதஸ் நிலவும் சூழ்நிலை காரணமாக online ல் விவாதிக்கப்பட்டது. ஸ்ரீ சுந்தரராம வாஜ்பாயி அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்கள். Online சதஸுக்கான Technical விஷயங்களை ஸ்ரீ ஸ்ரீ ரமண சர்மா (நெரூர்) மிகவும் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். 25 பஞ்சாங்க கர்த்தாக்களும் 5 பண்டிதர்களும் கலந்து கொண்டார்கள்.

### அத்வைத சபா

இந்த வருஷத்திய அத்வைத சபா ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி மற்றும் 2ம் தேதி Online மூலமாக நடந்தது. இதற்கான ஏற்பாடுகளையும் நெரூர் ஸ்ரீ ஸ்ரீ ரமண சர்மா ஏற்பாடு செய்திருந்தார்.

### காவேரி பூஜை

ஆடி மாதம் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (ஆடிப்பெருக்கு) காவேரி பூஜை வழக்கம் போல் சாஸ்த்ரோக்தமாக நடைபெற்றது. தேனம்பாக்கம் ஸ்ரீ மடம் முகாம் வளாகத்தில் அமைந்துள்ள ப்ரம்ம தீர்த்த கரையில் காவேரி பூஜை நடந்தது.

### உபாகர்மா / காயத்ரி ஜபம்

ஆகஸ்ட் 3ம் தேதி யஜுர் வேத உபாகர்மாவும் 4ம் தேதி செவ்வாயன்று ருக் உபாகர்மாவும் காயத்ரி ஜபமும் நடந்தேரியது. ப்ரம்மசாரிகள் காயத்ரி ஜபம் செய்தார்கள்.

### ஸ்ரீ பெரியவாள் ஜெயந்தி மஹோத்ஸவம்

ஆகஸ்ட் மாதம் 5ம் தேதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 86வது ஜயந்தி மஹோத்ஸவம் காஞ்சிபுரம் சங்கர மடத்திலும், முகாமிலும் வழக்கம் போல உத்ஸாகமாக கொண்டாடப்பட்டது. தற்போதைய சூழ்நிலை காரணமாக பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. வேத பாரயணம், வித்வத் சதஸ், சங்கீத கச்சேரிகள் நடைபெற்றன. ஜயந்தி அன்று ருத்ர ஏகாதசினி ஜப ஹோமம் நடந்து, கலச ஜலங்கள் ஸ்ரீ பெரியவாள் ப்ருந்தாவனத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு விசேஷ அலங்கார, ஆராதனை மஹா தீபாரதனை நடந்தேறியது. முகாமில் ஸ்ரீ பெரியவாள் பாதுகைக்கு ஸ்வர்ண காசுகள் வைத்து பாத பூஜை செய்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு தையல் மிஷின், இஸ்திரி பெட்டி (பித்தளை), இட்லி குண்டான் ஆகிய உபரகணங்கள் வழங்கப்பட்டன.

### புத்தக வெளியீடு.

ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சார்பாக ஸ்ரீ பெரியவாள் ஜயந்தி விழாவையொட்டி 05.08.20 மாலை 4.30 மணி அளவில் காணொளி (நூநிஉநிஉஞூ) வழியாக புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

1. கலாநிதி விலாசமணி ரா.விசுவநாத ஐயரின் ''பாலராமாயணம்'' என்ற நூலை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வெளியிட்டு ஆசியுரை வழங்கினார்கள்.

2. '' அன்பு, அருள், ஆனந்தம் - அபிராமி அந்தாதி விரிவுரை'' என்ற நூலை திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் அவர்கள் வெளியிட்டு ஆசியுரை வழங்கினார்கள்.

3. ''ஸ்ரீ ஜயேந்த்ர சங்கரம்'' என்ற ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 86வது ஜயந்தி மலரை தமிழ்நாடு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் மாண்புமிகு மாஃபா பாண்டியராஜன் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

4. ''இளசைப்புராணம்'' என்னும் இளையாத்தங்குடி மான்மியம் - வசனச்சுருக்கம்'' என்ற நூலை தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் கோ.விஜயராகவன் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

5. ''தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்'' -என்ற நூலின் இரண்டு தொகுதிகள் தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் / முதன்மை செயலாளர் திரு. க.பணீந்த்ர ரெட்டி (IAS) அவர்கள் வெளியிட்டு விழா பேரூரை ஆற்றினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளை ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியில் கல்லூரி முதல்வர் முனைவர் திரு. ராம வெங்கடேசன் அவர்கள் திறம்பட ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## கிருஷ்ண ஜயந்தி, விநாயக சதுர்த்தி

11.8.20 ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி பூஜை விசேஷமாக நடைபெற்றது. அன்று இரவு மூன்றாம் கால பூஜைக்குப் பிறகு க்ருஷ்ண ஜயந்தி பூஜை நடத்தப்பட்டது. ஸ்ரீ க்ருஷ்ணர் அவதாரகட்டம் வாசிக்கப்பட்டு வரதானங்கள் வழங்கப்பட்டது. 22.8.20 சனிக்கிழமையன்று விநாயக சதுர்த்தி பூஜை மிகவும் விசேஷமாக நடந்தது. காஞ்சிபுரம் மடத்திலும் விநாயக சதுர்த்தி பூஜை நடைபெற்றது. முகாமில் 23.8.20 அன்று ஸ்ரீ பிள்ளையார் விஸர்ஜனம் ப்ரம்மதீர்த்த குளத்தில் நடந்தது. முகாமில் கணபதி நவராத்திரியும் கொண்டாடப்பட்டது. தினம் ஒரு பழமாக 9 நாட்களும் திரிசதி அர்ச்சனை செய்யப்பட்டு, பழங்கள் பிரசாதமாக விநியோகிக்கப்பட்டன. அன்று ஹஸ்த நக்ஷத்திரம், ஸாம வேத உபாகர்மா ஸ்ரீ மடத்திலும் முகாமிலும் ரிஷி பூஜையுடன் நடந்தது.

இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் வழக்கம்போல் ப்ரதி தினம் பிக்ஷாவந்தனங்கள், பாதபூஜைகள் ஆகியவை நடத்தப்பட்டது. பல்வேறு சமஷ்டி பிக்ஷாவந்தனங்களும் நடைபெற்றன. பக்தர்கள் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலையால் அவர்கள் சார்பாக சங்கல்பம் செய்து ப்ரஸாதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. சமஷ்டி பிக்ஷாவந்தன சேவார்த்திகளுக்கு பூஜை முடிந்த பிறகு மாலை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வீடியோ கான்பரன்ஸிங் முறையில் அனுக்ரஹ பாஷணம் அளித்தார்கள்.

### சங்கீத இசை நிகழ்ச்சிகள்

தெற்கு மண்டல கலாச்சார மையம், தஞ்சாவூர் மற்றும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் இணைந்து இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் ப்ரதி தினம் மாலை 4மணி முதல் 6 மணி வரை Online மூலம் பல்வேறு இசை வித்வான்களால் இசை நிகழ்ச்சிகள் நடந்தேறியது.

இது தவிர ஸ்ரீமடம் முகாம் அமைந்துள்ள தேனம்பாக்கம் ஸ்ரீ ப்ரும்மபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை சண்டி ஹோமம் நடைபெற்று வருகிறது.

### விஸ்வரூப யாத்ரை

சாதுர்மாஸ்ய வ்ரத பூர்த்தி நாளான 02.09.2020 அன்று வழக்கமான ஸ்ரீமடம் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை முடித்துக் கொண்டு மாலை 5.00 மணி அளவில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தேனம்பாக்கம் முகாமிலிருந்து புறப்பட்டு அருகிலிருக்கும் ஓரிக்கை ஸ்ரீ மஹாஸ்வாமிகள் மணிமண்டபத்திற்கு விச்வரூப யாத்ரையாக சென்றார்கள். மணிமண்டபத்தில் பூர்ண கும்ப மரியாதையுடன் மங்கள வாத்யங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குள்ள ப்ரம்மாண்ட நந்திதேவருக்கு பூஜை செய்து, பிறகு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் சந்நிதியில் தர்சனம் செய்து கொண்டு புஷ்பங்களால் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் எழுந்தருளி பகவத்கீதை 11வது அத்யாயத்தை பூராவும் பாராயணம் செய்தார்கள். நிலவும் சூழ்நிலையை உத்தேசித்து பக்தர்கள் அதிகமாக அனுமதிக்கப்படவில்லை. இந்நிகழ்ச்சி முழுவதும் யூ-ட்யூப் இணைய தளத்தில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தர்சனம் செய்தார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை கோபாலபுரம் இஞ்சினியர் ஸ்ரீ மணி ஐயர் சிறப்பாக செய்திருந்தார்.

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடர்ந்து தேனம்பாக்கத்திலேயே முகாமிட்டு ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை செய்து வருகிறார்கள்.

(...தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ஸ்ரீ க்ருஷ்ணவதாரம்

13. அந்த சூரஸேனன் மகன் வாசுதேவன் என்பவர் தேவலன் மகளாய், உக்ரஸேனன் வளர்ப்பு மகளாய் வந்த தேவகியை திருமணம் செய்து வைத்ததால் கணவன் மனைவி ஆயினர்.

14. தேவகி மனம் மகிழ வேண்டும் என்பதற்காக உக்ரஸேனன் மகன் கம்ஸன் வசுதேவன், தேவகி ஏறிய தேரின் சாரதியாகி குதிரைகளின் கடிவாளத்தைப் பற்றி நின்றான்.

15. பயணத்தைத் தொடங்கிய கம்ஸனைப் பார்த்து ஒரு அசரீரி ‘‘ஹே! கம்ஸா ! மூடா! எந்த தேவகியின் மகிழ்ச்சிக்காக தேரை ஓட்ட நினைக்கிறாயோ, அந்த தேவகியின் எட்டாவது கரு உனக்கு எமனாகப் போகிறது’’ என்று உரைத்தது. இதைக் கேட்டவுடன் கோபம் அடைந்த கம்ஸன் தேவகியை வெட்ட தலைப்பட்ட போது வசுதேவர் தன் மனைவியைக் காப்பாற்ற,

16. கம்ஸா! போஜ வம்ச வீரர்களில் கௌரமானவன், புகழுடையவன் திருமணம் ஆன உன் தங்கையை, பெண்ணை, கொல்ல முயல்வது ஏன்? கம்ஸா! பிறந்தவனுக்கு, சரீரத்தோடு மண்ணில் வந்தவனுக்கு மரணம் கூடவே வருகிறது. இப்பொழுதோ அல்லது நூறு ஆண்டு கழித்தோ, பிராணிகளுக்கும் மரணம் நிச்சயம்.

(உன் மரணத்தைத் தடுக்க தங்கைக்கு மரணம் ஏற்படுத்துவது சரியா?)

17. இப்படி ஸாம பேதங்களால் அறிவுறுத்திய பிறகும், தன் சுய கௌரவத்தை உத்தேசித்து, தனது கொடுஞ் செயலினின்றும் அவன்மீள விரும்பவில்லை.

18. கடைசியாக வசுதேவர் சொன்னார். ‘‘கம்ஸா! இவளால் உனக்கு பயமில்லையே! அசரீரியின் வாக்குபடி என் எட்டாவது குழந்தை தானே எமன். இவளுக்குக் குழந்தை பிறந்தவுடன் உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன்’’ என்று கூறி ஸமாதானப்படுத்தினார்.

19. சிலகாலம் சென்றது. கீர்த்தி மந்தன் என்ற பெயருடைய அந்த தலை குழந்தையை, தன் வார்த்தை பொய்யாகக் கூடாது என்று பயந்த வசுதேவன் கம்ஸனிடம் ஒப்படைத்தான்.

20. கம்ஸன் : இந்தக் குழந்தையை நீ திரும்பி எடுத்துச் செல். உங்களது எட்டாவது கர்ப்பம் தான் எனக்கு மரணம் என்று விதிக்கப்பட்டுள்ளது அல்லவா!

21. (ஸாதுக்களாயும், நன்கு கற்றவர்களாயும், உள்ளவர்களால் எது விரும்பப்படுகிறதோ அது அடைய முடியாமல் போகும்)

ஸாதுக்களால் பொறுத்துக் கொள்ளாத விஷயம் எது உள்ளது?

நன்கு கற்றவர்களால் அடைய முடியாத விஷயம் எது உள்ளது?

கருமிகளால் செய்யாமல் விட்டவை எவை?

மன உறுதியுள்ளவர்களால் விட முடியாதவை எவை?

22. எனவே வஸுதேவன் எதையும் பொறுத்துக் கொண்டான். தேவகி எட்டாவதாகக் கருவுற்றாள். கருவடைதற்கு முன் பகவான், உலகுயிர்களின் அந்தராத்மாவாகிய பகவான் கம்ஸனுக்கு பயத்தை அளித்து, யாதவர்களின் வழிபடு தெய்வமான யோகமாயை அழைத்தான்.

23. ஆயர்களாலும், ஆயர்பாடி பெண்களாலும் அழகுற விளங்கும் அந்த ஆயர்பாடிக்குச் செல். அங்கு வசுதேவருடைய மனைவியாகிய ரோஹிணி இருக்கிறாள்.

24. கம்ஸனிடம் பயந்தவர்கள் பலரும் அங்கு உள்ளனர். அங்கு சென்று ஏழாவது கருவாய் தேவகியின் வயிற்றில் ஸாக்ஷாத் ஆதிசேஷன் அம்சமாய் இருக்கும் கருவை, வெகு கவனமுடன் எடுத்து ரோஹிணியின் வயிற்றில் வைத்துவிடு.

25. என் அம்சமாக நான் தேவகியின் மகனாய் அடைகிறேன் நீ யசோதையின மகளாய் பிறப்பாய்.

26. இப்படி ஒரு காரியம் நீ செய்தால் மனிதர்கள் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றும் ஈச்வரி என்று அர்ச்சித்து உனக்கு தூப தீப அலங்கார பலிகளால் அர்ச்சிப்பார்கள்.

27. அதுமட்டுமல்ல உனக்கு கோயில்கள் அமைத்து துர்க்கை, பத்ரகாளி, விஜயா, வைஷ்ணவீ, குமுதா, சண்டிகா, க்ருஷ்ணா, மாதவி, கன்யகா, மாயா, நாராயணீ, ஈசானி, ஸாரதா, அம்பிகா என்றெல்லாம் பெயர் சொல்லி பூசிப்பார்கள். இப்படி முன்னேற்பாடுகளோடு தேவகியின் கர்ப்பமாய்த் தோன்றினான்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 7

பி. ஆர். கண்ணன்



அடுத்து சிவன் ஸ்துதி செய்தார்: 'தாங்களே பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களின் ஜனனி. எல்லா காரியங்களையும் செய்பவர். ஸ்திரீபாவத்துடன் தங்கள் பாதசேவையே த்ரிலோகாதிபத்தியத்தைவிட சிறந்தது. **ஸகலலோகஸிஸ்ருக்ஷுரஹம் ஹரி: கமலபூஸ்ச பவாம யதாம்பிகே ।** தவபதாம்புஜபாம்ஸுபரிக்ரஹம் ஸமதிகம்ய ததா நநு சக்ரிம நந தங்கள் பாததூளியை சிரஸில் தரித்தால்தான் பிரம்மாவோ, ஹரியோ, நானோ, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரியங்களைச் செய்யும் வல்லமை பெறுவோம். தபஸ், ஸமாதி போன்றவைகளினால் முக்தி கிட்டாது; தங்கள் பாததூளிதான் முக்தியைக் கொடுக்கும். முன்னர் எப்போதோ தாங்கள் உபதேசித்த நவாக்ஷரி மந்திரம் இப்போது தெளிவாக இல்லை. மறுபடியும் உபதேசிக்கவும்.' என்றார். (நவாக்ஷரி மந்திரம்: ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே என்பதாகும். இது போன்ற மந்திரங்கள் குருமுகமாக உபதேசம் பெற்றுத்தான் உச்சரிக்க வேண்டியவை.) மந்திரோபதேசம் பெற்று சிவன் அங்கேயே அமர்ந்து ஜபித்தார். சிவன் பிரார்த்தனையில் பாததூளி தரித்தல் என்கிற கர்மம் பிரதானமாக உள்ளது. முக்திக்கு கர்ம மார்க்கத்தைக் காட்டுகிறது.

பிரம்மாவின் ஸ்துதியில், 'வேதங்கள் ஸ்வாஹா (தேவ உபாஸனையின் தேவதை), ஸ்வதா (பித்ரு உபாஸனையின் தேவதை) என்று போற்றுவது தங்களைத்தான். மோகம், மதிமயக்கம் மிகுந்த ஸம்ஸாரத்தில் மாட்டிக்கொள்ளாமல், ஸம்ஸார பயத்தை போக்குகின்ற தங்கள் பக்தி எப்போதும் இருக்கும் வண்ணம் அருளவும்' என்றார். பிரம்மாவின் பிரார்த்தனையில் முக்திக்கு பக்தி மார்க்கத்தை தெளிவாகவே காட்டுகிறார். மும்மூர்த்திகளின் ஸ்துதிகள் தேவிபாகவதத்தில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. பாராயணம் செய்ய ஏதுவானவை.

பிரம்மா இப்போது ஒரு சந்தேகத்தை தேவியிடம் கேட்டார். ‘உபநிஷத்துக்கள் பிரம்மத்தை வர்ணிக்கின்றனவே; நிர்குணமாக, உருவமில்லாததாக. பிரம்மம் ஒன்றுதான் ஸத்தியம் என்றும் பறைசாற்றுகின்றன. அந்த பிரம்மம்தான் தாங்களா‘ என்று. தேவி தெளிவுபடுத்தினாள்: ‘பிரம்மமும், நானும் வேறல்ல. கண்ணாடியில் தெரியும் பிரதிபிம்பம் போல். ஜலத்தில் குளிர்ச்சி, அக்கினியில் உஷ்ணம்போல் பிரிக்க முடியாதது. ஸ்திரீயோ, புருஷனோ, நபும்ஸகனோ இல்லாத பிரம்மமாகிய நானே, ஸ்ருஷ்டியின்போது உருவத்தை கல்பித்துக் கொள்கிறேன். என்னைத்தவிர வேறு வஸ்து பிரபஞ்சத்தில் இல்லை. உலகத்தில் சக்தி என்பது நானே. யாராவது வேலை செய்யமுடியாமல் களைத்திருக்கும்போது, அருத்திரனாக இருக்கிறேன், அவிஷ்ணுவாக இருக்கிறேன் என்று சொல்வார்களா? அசக்தனாக இருக்கிறேன் என்றுதானே சொல்கின்றனர். எல்லாருக்கும் காரியங்களைச் செய்யும் சக்தியை நானே அருளுகிறேன்‘ என்றாள்.

தேவி பிரம்மாவுக்கு மஹத்தத்துவம், அகங்காரம் தந்து, ஸ்ருஷ்டி சாமர்த்தியத்தை வழங்கினாள். ரஜோகுணதேவதையாக, மகாஸரஸ்வதியை தன் அம்சமாக பிரம்மாவிடம் அருளி, நவாக்ஷரி மந்திரத்தையும் உபதேசித்து, ஸத்தியலோகம் செல்லச் சொன்னாள். அதேபோல் விஷ்ணுவுக்கு ஸத்வகுண தேவதையாக மகாலக்ஷ்மியை அருளி, சிவனுக்கும், விஷ்ணுவிற்கும் பேதமில்லை என்று ஆணித்தரமாக நவின்று, நான்கு அக்ஷர மந்திரத்தை ஜபிக்கச் சொன்னாள். (நான்கு அக்ஷர மந்திரம்: ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் என்பதாகும்). விஷ்ணுவை வைகுண்டத்தில் வசிக்குமாறு ஆக்ஞாபித்தாள். சிவனுக்கு மகாகௌரியை அருளி, அகங்காரம், மஹத், தன்மாத்திரைகள் முதலிய தத்துவங்களையும் அளித்து, கைலாஸத்தில் வசிக்கச் சொன்னாள். மஹத் முதலான தத்துவங்கள் ஸ்ருஷ்டியில் ஸூக்ஷ்மத்திலிருந்து ஸ்தூலத்திற்கு உருவம் கொடுப்பதற்காக பிரம்மாவிற்கு அருளப்பட்டன. அதேபோல, அதே தத்துவங்கள் ஸம்ஹாரகாலத்தில் ஸ்தூலத்திலிருந்து ஸூக்ஷமத்தில் மாற்றி லயம் அடைவிப்பதற்காக சிவனுக்கும் தரப்பட்டன என்று கொள்ளலாம். பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் தேவிகளுடன் விமானத்தில், பழைய மது கைடப வதம் நிகழ்ந்த இடத்திற்கே திரும்பினர். அங்கிருந்து தத்தம் ஸ்தானங்களுக்குச் சென்று தங்கள் காரியங்களை நிறைவேற்றினர்.


**குணங்கள்**

வியாஸர் இச்சந்தர்ப்பத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களை ஜனமேஜயனுக்கு விவரித்தார். பிரபஞ்சம் முழுவதும் - எல்லா அசையும் பொருள், அசையாப்பொருள்களும், ஸகல ஜீவராசிகளும் - இந்த முக்குணங்களினாலேயே

ஆனவை. முக்குணங்களின் தாரதம்மியத்தினால் பொருட்களும் ஜீவர்களும் வேறுபடுகின்றனர். ஸத்வகுணம், ஸத்யம், சௌசம், க்ஷமை, உறுதி, கருணை, தர்மத்தில் பிரீதி, சுகம் முதலிய ஸத்குணங்களைக் கொண்டது. ஞானசக்தியை வளர்ப்பது. வெண்மை நிறமானது. ரஜஸ் என்ற குணம், ஆசை, வெறுப்பு, பேராசை, த்ரோகம் முதலிய குணங்களைக் கொண்டது. கிரியாசக்தியை வளர்ப்பது. சிவப்பு நிறமானது. தமஸ் என்ற குணம், மதிமயக்கம், கோணல்புத்தி, நாஸ்திக்யம், கொடுமை, அதீத நித்திரை முதலிய துர்குணங்களைக் கொண்டது. திரவ்யசக்தியை வளர்ப்பது. கருப்பு நிறமானது.

இந்த மூன்று குணங்களுமே பிரபஞ்சத்தில் ஒன்றையொன்று அடிப்படையாகக் கொண்டவை. தமோ, ரஜோ குணங்களை அமுக்கி, ஸத்வகுணத்தை வளர்த்தல் தான் மனுஷ்யனுக்கு நல்லது. சுத்தஸத்வம் (ரஜோ, தமோ குணங்கள் கலக்காமல்) என்பது தேவி, ஈஸ்வரன் இவர்களுக்கே உரியது. சரீரம் தரித்த ஜீவர்கள் முக்குணங்களும் கலந்தவர்கள்தான். ஆனாலும் மனுஷ்யர்களின் பிரயத்தினம், எப்போதும் தேவியின் நாமங்களைச் சொல்லிக்கொண்டு, தேவியின் பாதாரவிந்தங்களை ஸ்மரித்துக் கொண்டு, அதன் மூலம் ஸத்வகுணவிருத்தியை நோக்கியே இருக்க வேண்டும்.

*(வளரும்)*




**ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம்**

புத்தகம் 400 பக்கங்களை உள்ளடக்கியதாக
எளிய வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.
ஆஸ்திக அன்பர்கள் இதை படித்து அனுஸரித்து
பயன் பெறுவீர்களாக இப்புத்தகத்தைப் பெற

**V.G. கிருஷ்ணமூர்த்தி**

"காமாட்சி நிலையம்" எண். 101, 19வது தெரு,
ஜே.பி எஸ்டேட், ஆவடி, சென்னை - 600 054
செல் : 9884058582
அவர்களை அணுகவும்

புத்தகத்தின் விலை மற்றும் கொரியர் செலவு தனி.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 28

**சிவ சந்த்ரசேகரன்**

## கர்பக்ருகமும் காராக்ருகமும்



பெரியவா கேரளத்தில் முகாமிடிருந்தர்கள். திருச்சூரில் முகாம். வடக்கு நாதர் சிவன் கோயில் மிகப் ப்ரஸித்தம். தினமும் பூஜைகள் முடித்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்று தர்சனம் செய்வார்கள். அக்கோயிலின் பூஜகர்கள் மிகவும் ஆசாரமுடையவர்கள். அக்கோவிலில் ஒரு பழக்கம் ஆச்சாரத்துடன் தொடர்புடையதாக இருந்தது. பூஜை செய்வோர் கோயிலுக்கு வந்தபின் அவர்களுடைய வீட்டிற்குச் செல்லக்கூடாது. கடுமையான ப்ரம்மசர்யம் அனுஷ்டிக்க வேண்டும் என்பதுதான் அது.

பெரியவா தினமும் அங்கு சென்று சிவ தர்சனம் செய்து பூஜை செய்பவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி வந்தார். ஒரு நாள் அவர் அங்கு சென்றிருந்த போது அங்கிருந்த ஒரு பூஜகர் உள்ளே வேறு இடத்துக்குப் போயிருந்ததால் அவர் தர்சனம் கிட்டவில்லை. அடடா இப்படி ஆகிவிட்டதே என்று மிகவும் மனம் வருந்தினார். தமக்கு க் கிடைத்தது அவ்வளவுதான் என்று மனம் வருந்தினார். இதை எப்படியோ அறிந்தார். பெரியவா .

அன்று சிவராத்ரி. பெரியவா ஒவ்வொரு காலம் பூஜை முடிந்தவுடன் சிவாலய தர்சனம் செய்வது வழக்கம். பெரியவா மூன்றாம் காலம் பூஜை முடிந்தவுடன் வேகமாக வடக்கு நாதர் கோவிலுக்குச் சென்றார்.

கர்பக்கிருகத்தில் இருந்த இவரது தர்சனத்துக்காக ஏங்கிய பூஜகருக்கு மிகவும் ஆச்சர்யம், உவகை ஆனந்தம். இனி தனக்குக் கிடைக்காது என்று நினைத்த நிகழ்ச்சி நடப்பது கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

தேடி வந்து தர்சனம் கொடுத்து அவரை வியப்பில் ஆழ்த்தினார். பெரியவா வங்காளத்தில் மிதுனாபூர் என்னுமிடத்தில் முகாமிட்டிருந்தார். ஏராளமான மக்கள் அவரை தினமும் தர்சிக்க வந்து கொண்டிருந்தனர்.

பூஜை முடிந்து உபன்யாஸம் செய்தபின் ஓய்வெடுப்பது வழக்கம். மிதுனாபூர் அருகே ஒரு காராக்ருஹம். அதில் சுதந்திரத்துக்காக போராடும் த்யாகிகளை அடைத்து வைத்திருந்தது ப்ரிட்டிஷ் அரசாங்கம். இங்கிருந்த கைதிகளுக்கு பெரியவாளைப் பார்க்க ஆவல். தங்களின் ஆவலை அதிகாரியிடம் சொல்ல அவரும் இவர்களின் மத உணர்வுகளை மதித்து அனுமதியளித்தார் நிபந்தனை ஒன்றையும் விதித்தார்.

மாலை ஆறு மணிக்குள் திரும்பி வரவேண்டும். இல்லையெனில் சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்பதுதான் அது. அவர்களும் சம்மதித்து பெரியவா முகாமுக்கு வந்தனர். பெரியவா அப்போதுதான் பூஜை முடித்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அணுக்கத் தொண்டர்கள் கைதிகளுக்காக அவரை எழுப்ப இயலாது என்று தெரிவித்து விட்டனர். கைதிகள் காத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி விட்டனர். மணியோ ஆகிவிட்டது. ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது, அவர்கள் இனி தர்சனம் கிடைக்காது என்று எண்ணி அங்கிருந்து கிளம்பினர்.

அப்போது உள்ளேயிருந்த பெரியவா திடீரென்று வெளியே வந்து நின்றார். கைதிகளுக்குக் கொண்டாட்டம், பரவசம். அங்கேயே நமஸ்காரம் செய்துகொண்டு ஓட ஆரம்பித்தனர். அவர்கள் பின்னாலேயே பெரியவாளும் நடந்து போனார். கைதிகள் மீண்டும் தர்சனம் செய்து கொள்ள ஏக்கத்துடன் திரும்பினர். ஆச்சர்யம் பெரியவா தன் கரத்தைத் தூக்கி ஆசீர்வாதம் செய்பவராய் தங்கள் அருகிலேயே நிற்பதைக் கண்ட அவர்கள் கண்ணீர்மல்க நமஸ்கரித்துச் சிறைச்சாலைக்குத் திரும்பினர். இதுவும் தேடி வந்த அருள்.

*மகாபெரியவாளைத் தேடித்தான் பாமரன் முதல் பண்டிதர்கள் வரையில் செல்வது வழக்கம். இதற்கு மாறாக பெரியவாளே சிலரைத் தேடி தர்சனம் கொடுத்தது உண்டு. இதுவும் அவரே சொன்னது. காசியில் ஆலமரத்து ஆண்டியைப் பார்க்க அவர் சென்றது பற்றி கடந்த இதழில் கண்டோம். இன்னொரு நிகழ்ச்சியை இப்போது பார்ப்போம்.*

*பெரியவா 1930 இல் ஸ்ரீ வைகுண்டம் பகுதியில் யாத்திரை நடத்தி வந்தார். வழக்கம் போல் சுற்றி இருக்கும் பகுதிகளிலிருந்தும் மக்கள் தர்சனத்துக்கு வந்தனர். ஸ்ரீ வைகுண்டம் பகுதியின் ஓரிடத்தில் ஒரு விசித்ரமான பழக்கம் வழங்கி வந்தது. இவ்விடத்தில் இருக்கும் பெண்கள் அவ்விடத்தின் எல்லையைத் தாண்டினால் அவர்களது கழுத்து உடம்பில் தங்காது. இவ்வளவு கொடூரமான தண்டனை, வழக்கம். ஸ்ரீ வைகுண்டத்தின் மக்கள் பெரியவாளை தர்சிக்க வந்த போது இதைப்பற்றிச் சொல்லி அங்கு இருக்கும் பெண்கள் பெரிவாளைத் தர்சிக்க ஆவலாயிருப்பதாகக் கூறினார்கள்.*

*அவரும் எந்த ஸம்ப்ரதாயத்தையும் மாற்ற விரும்பாதவர். அவரே அவ்விடத்துக்கு கிளம்பினார். யாத்திரை ஸ்ரீவைகுண்டம் நோக்கி போய்க் கொண்டிருந்தது. வழியில் ஒரு கிழவி பெரியவா போவதைப் பார்த்து ஐயா கொஞ்சம் நில்லுங்கள் நான் பெரியவங்களை பார்க்கணும் என்று வழி மறித்தாள். ஸ்ரீ வைகுண்டம்தான் போறோம் அங்கேயே வந்து தர்சனம் செய்து கொள்ளச் சொல் என்று பெரியவா கூற அவள் ''இல்லீங்க நான் அங்க வந்தா என் தலை இருக்காது. அதுக்காகத்தான் நிக்கச் சொல்றேங்க. 300 வருஷங்களுக்கு முன்னால எங்க பரம்பரையைச் சேர்ந்தவங்க எல்லையைத் தாண்டி வந்துட்டாங்க. நான் அவன்களோட வழியில் வந்தவ. அங்க வந்தா என் தலை இருக்காதுங்க. அதனாலதான் பல்லக்க நிறுத்தச் சொன்னங்க. தப்புத்தான் மன்சிக்கிங்க '' என்றாள்.*

*பெரியவா உடனே பல்லக்கை நிறுத்தி அக்கிழவியிடம் சென்று ''உன் மேல தப்பில்லம்மா. நன்னா என்னை தர்சனம் பண்ணிக்கோ என்று கூறி அவளுக்கு அனுக்ரஹம் செய்தார். பின்பு ஸ்ரீ வைகுண்டம் சென்று பாதிக்கப்பட்ட ஸ்த்ரீகளுக்கும் அனுக்ரஹம் செய்தார். தேடி வந்த திருவருள் என்றால் பெரியவாதான். படித்தவன் பாமரன் எனும் பாகுபாடு எதுவுமில்லாமல் மாபெரும் மழை போல் பெரியவாளின் அருள் மழை பொழிந்தது பாரெங்கும்.*

*(தொடரும்)*

# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

### சிவக்ருஷ்ண யுத்தம்

இதென்ன? சிவனுக்கும் க்ருஷ்ணருக்குமா யுத்தம்? பௌராணிகர் கூறலானார். பாணன் என்னும் பெயரைக் கொண்ட அஸுரன் ப்ரஹ்லாதனின் எள்ளுப்பேரன், விரோசனனின் கொள்ளுப் பேரன், பலியின் பிள்ளை. சோணிதபுரம் என்னும் ராஜ்யத்தைத் திறம்பட ஆண்டு வந்தான். பெரிய சிவபக்தன் சிவனை பல வழிகளில் பல வருஷங்கள் ஆராதித்து வந்தான். இவனுடைய பக்தியை மெச்சி சிவன் அவன் முன் ஆவிர்பவித்தார். அவரிடம் அசுரன் எப்போதும் அவனுடைய நாட்டை விட்டு அவர் நீங்கக் கூடாது எப்போதும் ரக்ஷிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான் வரம் தந்த அவர் ஆயிரம் கைகளையும் தந்தார். அசுர புத்திக்கு இணங்க மூவுலகையும் வென்றான். வெற்றியில் சங்கரரைப் போற்றி கூத்தாட அவரும் ஆவிர்பவித்தார்.

''ஐயனே உமதருளால் எல்லா உலகையும் வென்றுவிட்டேன். இனி எனக்கு சமமாக யுத்தம் செய்ய எதிரியில்லை. நீவிர் அருளிய ஆயிரம் கைகளும் எனக்குப் பாரமாயுள்ளது. எப்போது பெரும் யுத்தம் நடக்கும்? இந்த கைகைளினால் நான் எந்த எதிரியை அழிப்பேன்?'' அஸுரனுடைய ஆணவத்தைப் பார்த்த சிவபெருமான் கூறினார். ''பாணாஸுரனே ஒரு நாள் உனது இந்த கோட்டை முறியும். அதைத் தகர்க்க உன்னை எதிர்க்க ஓரெதிரி வருவான் உனக்குச் சமானமான எதிரி உன் ஆயிரம் கைகளையும் அறுப்பான்''

இதைக்கேட்ட அசுரன் மகிழ்ச்சியடைந்தான். தன் அமைச்சர் குபந்தனிடம் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறி சிவபெருமான் கூறிய அந்த நாள் வருவதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்த நாளும் ஒரு நாள் வந்தது. சோணிதபுரத்தின் கோட்டைகள் அந்த நாளில் தகர்க்கப்பட்டன. பாணாசுரன் யுத்தம் வந்தது கண்டு மகிழ்ச்சி அடைந்தான். அதே சமயத்தில் யாரோ ஒரு இளைஞன் அவனுடைய பெண் உஷாவுடன் இருப்பதாக செய்தி வந்தது. க்ருஷ்ண பரமாத்மாவின் பேரனான அனிருத்தனே அவன்.

பாணாசுரன் அவனைக் கொல்ல ஆணையிட்டான். அனிருத்தனுக்கும் வீரர்களுக்கும் இடையே பெரும் போர் மூண்டது. அனிருத்தன் நன்றாக போர்புரிந்தாலும் தோல்வியடைய பிணைக் கைதியாய் பிடிப்பட்டான். பாணாசுரன் அவனைக் கொல்ல யத்தனித்தபோது ''அசுரனே எல்லாம் சங்கர பகவானின் விருப்பப்டியே நடக்கிறது, அவனைக் கொல்ல வேண்டாம் '' என்ற அசரீரி சொல்ல அனிருத்தனை விட்டு விட்டான்.

அனிருத்தனும் தேவியை வேண்ட நடு இரவில் விடுவிக்கப்பட்டான். இதன் நடுவில் த்வாரகையில் அனிருத்தன் சோணிதபுரத்தில் கைதியாக இருப்பதையறிந்த க்ருஷ்ணர் தன் படையுடன் யுத்தத்திற்குச் சென்றார். சங்கரபகவானும் தன் பக்தனுக்கு கொடுத்த வாக்கு பொய்க்காதிருக்க தன் படைகளுடன் வர இரு படைகளுக்கும் துமுல யுத்தம் மூண்டது. யுத்தம் முடிவுக்கு வரவில்லை. சங்கர பகவானுக்கும், க்ருஷ்ணருக்கும் நடந்த யுத்தத்தைப் பார்க்க வானில் தேவ கணங்கள் சூழ்ந்தன. இதற்கு முடிவு காண க்ருஷ்ணர் சங்கரரை வேண்ட அவரும் ''என்னை ஜம்பணாஸ்த்ரத்தை ப்ரயோகித்து மயக்கமடையச் செய்யுங்கள்''

வெற்றி உமதே என்று கூறினார். அவரும் அவ்வாறே செய்ய சிறிதுகாலம் சங்கரர் மயக்கமடைந்தார். பாணாஸுரனின் ஆயிரம் தலைகள் அப்போது வெட்டப்பட்டன . அவனை க்ருஷ்ணபரமாத்மா கொல்ல யட்தனித்த போதுவிழித்துக்கொண்ட சங்கரர் தனது பக்தனை விட்டுவிடுமாறு வேண்டினார். உண்மை அறிந்த பாணாஸுரனும் க்ருஷ்ணரை வணங்கி சிவனிடம் எப்போதும் தன் பக்கத்திலேயெ இருக்க வேண்டினான்.

சோணிதபுரம் உஷாவின் புதல்வனால் ஆளப்படவேண்டும் என்றும் வரம் கேட்க அதுவும் நிறைவேற்றப்பட்டது.

(சிவ புராணம்)

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

पदकमलम् करुणानिलये वरीवस्यति यो अनुदिनम् सिशिवे
अयि कमले कमलानिलये कमलानिलय: स कथम् न भवेत् ।
तव पद्मेव परम् पदमित्यनुशीलतो मम किम् न शिवे
जय जय हे महिषाशुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १७ ।।

**பத கமலம் க்ருணா நிலயே வரிவஸ்யதி யோ அனுதினம் ஸசிவே**
**அயி கமலே கமலா நிலயே கமலா நிலய: ஸ கதம் ந பவேத் ।**
**தவ பதமேவ பரம்பதமித்யனுசீலதோ மம கிம் ந சிவே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலசுதே ॥ 17 ॥**

*கருணையின் இருப்பிடமே தினமும் உன் திருவடித் தாமரைகளை வணங்குபவர்களின் இதயத் தாமரையை உறைவிடமாகக் கொள்கின்ற மகாலக்ஷ்மியே நீ அடியவர்கள் நெஞ்சில் வாழ்ந்தால் அவர்களே திருமால் ஆகிவிடமட்டார்களா?உன் திருப்பாதங்களே மிக உயர்ந்த செல்வம் என்று கருதுகின்ற எனக்கு அதைவிட வேறு செல்வம் வேண்டுமா? மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

कनकलसत्कल सिन्धुजलैरनुषिन्चति तेगुणरन्गभुवम्य
भजति स किम् न शशीकुचकुम्भतटीपरिरम्भ सुखानुभवम् ।
तव चरणम् शरणम् करवाणि नतामरवाणि निवासि शिवम्
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १८ ।।

**கனகலஸத்கல ஸிந்துஜலைரனுஷின்சதி தே குணரங்கபுவம்**
**பஜதி ந கிம் ந சசீகுச கும்பதடீபரிரம்ப ஸுகானுபவம் ।**
**தவ சரனம் ஸரணம் கரவாணி நதாமரவாணி நிவாஸி சிவம்**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 18 ॥**

*பொன் போல் ப்ரகாசிக்கின்ற ஸிந்து நதியின் நீரினால் பக்தர்கள் உன்னை நீராடுகின்றனர். அவர்கள் தேவர்களின் தலைவியான இந்த்ராணியின் மார்பகங்களைப்போன்ற பெரிய மார்பகங்களை உடைய பெண்கள் தழுவும் சுகத்தைப் பெறமாட்டார்களா என்ன? அச்சுகத்தைப் பெரிதென்று கருதாமல் உன்னையே நான் தஞ்சமடைந்துள்ளேன். என் நாவில் கலைமகளை எழுந்தருளச் செய்வாய். மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலை மகளே ஜய ஜய என்று உன்னை போற்றுகிறேன்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

किम् स्यात् पुनस्श्शन्सरनस्य बीजम् अद्वैतभावम् समुपेयुषो अस्य ।। 91

**கிம் ஸ்யாத் புனஸம்ஸரனஸ்ய பீஜம் அத்வைத பாவம் ஸமுபேயுஷோ அஸ்ய 91 விவேக சூடாமணி**

*அத்வைத பாவத்தை உணர்ந்தபின் போக்கும் வரவும் உண்டா?*

बह्माद्वैतम् यत् तदेव अहम्सिम । 92

**ப்ரம்மதவைதம் யத் ததேவ அஹமஸ்மி விவேகசூடாமணி**

*ப்ரம்மதவைதமாகவே நானிருக்கிறேன்.*

अद्वैतानन्दभ्राक्तमिदम् कोअहम् च कस्याहम् । 93

**அத்வைத ஆனனந்தபராக்தமிதம் கோஹம் ச கஸ்யாஹம் 93**

*பொங்கி வரும் ஆனந்த அத்வைதத்தில் நான் யார்? யாருடையவன் நான்?*

मय्यद्वैते भाति तस्माच्छिवोहम् । 94

**மய்யத்வைதே பாதி தஸ்மாத் சிவோஹம் (ஆத்வைத பன்சரத்னம்)**

*அத்வைதமாக சிவமாக இருக்கிறேன்.*

सुखरूपम् चिदद्वैतम् ।। 95

**சுகரூபம் சிதத்வைதம்**

*அத்வைதம் சித் ரூபமாயும் ஆனந்த ரூபமாயுள்ளது.*

एकमेव अद्वितीयम् ब्रह्मणो नेह किन्चन । 96

**ஏகமேவ அத்விதீயம் ப்ரம்மணோ நேஹ கின்சன**

*ப்ரம்மத்தைத் தவிர வேறு எதுவுமில்லை அதுவே ஏகம்.*

अद्वितीये परे तत्वे व्योमवत् कल्पना कुतः । 97

**அத்விதியே பரே தத்வே வ்யோமவத் கல்பனா குத:**

*ஆகாசம் போல் எங்குமுள்ள அத்விதீயத்தை எப்படி குறுக்க முடியும்?*

बह्मास्ति सत्यम् परमद्वितीयम् । 98

**ப்ரம்மாஸ்தி ஸத்யம் பரம அத்விதீயம் விவேக சூடாமணி**

*ஸத்யமாயும் பரம அத்விதீயமாயும் ப்ரம்மம் உள்ளது.*

तदद्वैतम् समत्वातु नित्यम् चान्यदिविकल्पितात् । 99

**ததத்வைதம் ஸமத்வாத் நித்யம் ச அன்யத் விகல்பிதம் (உபதேச ஸாஹஸ்ரீ)**

*நித்யமாய் அத்வைதமாயுள்ள ஸத்யம் வேறு எந்த பேதத்தை.*

आनन्दमात्रमवभाति सदद्वितीयम् । 100

**ஆனந்த மாத்ரம் அவபாதி ஸத் அத்விதீயம்**

*எப்போதும் உள்ள அத்வைதம் ஆனந்தமாய் ப்ரகாசிக்கிறது.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து
அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



துச்சாசனன் இழுக்க இழுக்க வஸ்த்ரங்கள் வளர்ந்து கொண்டேயிருந்தன.

இதைக்கண்டவர்கள் அவளை புகழ்ந்தும், துர்யோதனனை இகழ்ந்தும் பேசினர்.

மலை மலையாய் குவிக்கப்பட்ட வஸ்த்ரங்கள் நிலையில் துச்சாதனன் முடியாமல் சரிந்தான் வீழ்ந்தான்.

இந்த பெண்ணடிமையை வீட்டுக்கு இழுத்துச் செல் என்று கர்ணன் சொல்ல சபையில் அவளை துச்சாதனன் இழுக்க ஆரம்பித்தான்.

த்ரௌபதி ''பீஷ்மபிதாமகரே, த்ரோணரே, க்ருபரே, விதுரரே என்னைக் காப்பாற்றும். நீங்கள் அறம் தெரிந்தவர்கள் அல்லவா? ஏன் மௌனம்?

அரசனே உமது மாட்டுப் பெண்ணைக் காப்பாற்றவும். காந்தாரி என் நிலையைப் பாருங்கள் உமது மாட்டுப் பெண்னைக் காப்பாற்றும். துர்யோதனின் வசம் சென்று அழிந்து கொண்டிருக்கிறேன். ''

*விதுரர் அரசனே இக்கொடுமையை நிறுத்து. நீயும் உன்குலமும் அழிவிலிருந்து தப்பிக்க வேண்டுமெனின் பாண்டவர்களுக்கு உன் புதல்வர்கள் இழைக்கும் நாசத்தை நிறுத்து.*

*விதுரரின் உபதேசம் அரசனின் புத்திக்கு எட்டவில்லை. அந்த மகா சபையில் விதி தள்ள விதுரரின் எச்சரிக்கைத் தள்ளப்பட துர்மதியான துர்யோதனன் த்ரௌபதியிடம் அவ்வப்போது தன் தொடையில் ஏறி அமர சங்கேதம் செய்தான்.*

**த்ரௌபதியின் சபதம்**

*ஹே துர்யோதனா! துர்மதியே எந்த தொடையை எனக்குக் காட்டினாயோ அங்கேதான் உன் அழிவிற்கு ஸ்தானம். துர்மதியே எனக்கு இக்கொடுமையை செய்த உன் தம்பி துச்சாதனன் ரத்தத்தை பீமன் குடிப்பான். பாபமதியான கர்ணன் தன் பரிவாரங்களுடன் அர்ஜுனன்னால் அழிக்கப்படுவான். குடிலமதியான சகுனியும் தன் சேனை பரிவாரங்களுடன் சஹதேவனால் நிர்மூலமாக்கப்படுவான்.*

*இப்படி தன் சாபத்தை த்ரௌபதி உரைக்க, வானிலிருந்து மலர்கள் வீழ்ந்தன. அதே சமயத்தில் அர்ஜுனன் அவள் வார்த்தைகளைக் கேட்டவுடன் வீறுகொண்டு வில்லெடுத்து நின்றான். கோபத்துடன் திடீரென்று எழுந்த அர்ஜுனனை தர்ம புத்ரர் பார்த்துக் கூறலானார்.*

*அர்ஜுனா கோபம் கொள்ளாதே. நமக்கு புகழ் சேர்க்காது அமைதி கொள். இந்த பொய் சூதாடிகளை நானே கொளுத்துவேன். அது சரியான வழி முறை அல்ல. உலகிற்காக பொறுமை கொள்''*

*அப்போது த்ருதராஷ்ட்ரனனின் சபையின் உச்சி கோபுரத்தில் நரியொன்று ஊளையிட்டது, அதற்கு கழுதைகளும், பக்ஷிகளும் ப்ரதி ஊளையிட்டன. இந்த சப்தத்தின் தத்வத்தை உணர்ந்த விதுரனும், பீஷ்மரும், த்ரோணரும், க்ருபரும், காந்தரியும் ஸ்வஸ்தி ஸ்வஸ்தியென்று கூறலாயினர்.*

*இக்கெட்ட சகுனத்தை காந்தாரியும், விதுரரும் அரசனிடம் சொல்ல அவன் கூறுவான்.*

*''துர்யோதனா நீ முடிந்தாய். நீ ஒரு முட்டாள். அவையின் நடுவில் பாண்டவர்களின் மனைவியை மானபங்கம் செய்வது இழி செயல். நீ ஒரு தூர்த்தன். பின்பு அவன் த்ரௌபதியைப் பார்த்து சொல்வான்.*

*(தொடரும்)*

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

***வினா : - உலகைத் தியானிப்பவனுக்கு முக்தி கிடைக்குமா?***

***விடை : -*** *கிடைக்காது. பொய்யான உலகைத் தியானிப்பவனுக்குப் பந்தந்தான் ஏற்படும். மெய்யான பரம்பொருளைத் தியானிப்பவனுக்கு முக்தியேற்படும்.*

***விடை : - இது எதனால் தெரிகிறது?***

*சாந்தோக்கிய உபநிடதம் 6-வது அத்தியாயத்தில், 16-வது கண்டத்தில், 'காய்ச்சிய மழுவை ஏந்துதல்' என்னும் உதாரணத்தால் இது விளக்கப்படுகிறது.*

***வினா : - எப்படி?***

***விடை : -*** *'பொய்யைக் கடைப்பிடித்தவன் திருடன். அவன் காய்ச்சிய மழுவைக் கொள்ளும் போது எரிக்கப்படுகிறான். அவனுக்குப் பந்தம் ஏற்படுகிறது. திருடாதவன் மெய்யைக் கடைப்பிடித்தவன். அவனுக்கு விடுதலை ஏற்படுகிறது.' என்னும் பொருளை விளக்கிவிட்டு, அடுத்த வாக்கியத்திலேயே, 'அது போல எல்லாம் பரமாத்மாவே நீயும் அவனே' என்ற மெய்யைக் கடைப்பிடித்தவன் பந்தத்தினின்று விடுபட்டு, வீட்டையடைகிறான் என்ற உத்தாலகர் என்னும் முனிவர் தன் குமாரனான சுவேத கேதுவுக்கு உபதேசிக்கிறார்.*

*(இவ்விடத்துள்ள 'அது நீயாயிருக்கிறாய்' என்னும் மஹா வாக்கியம், மோக்ஷத்தின் பொருட்டு உபதேசிக்கப்பட்டதாதலால், நான் பருத்தவன் என்னும் உலககோருடைய வாக்யதைப் போல பொய்யான வொற்றுமையை யறிவிப்பதன்று.*

*இதன் விரிவைப் பின்னர்க் காணலாம்.*

### *3. ஞானத்தாலே நான் முக்தி பெற முடியும்*

***வினா : - முக்தியை எதனால் பெற முடியும்?***

***விடை : -*** *அறிவால் - அதாவது ஞானத்தாலே தான் பெற முடியும்.*

***வினா : - இதற்கு ஆதாரமென்ன ?***

***விடை : -*** *புருஷஸூக்தத்தில் உள்ள 'அந்தப் பரம்பொருளையறிந்தவன் இவ்வுலகிலே(யே) அழிவற்றவனாகிறான். (நற்)கதிக்கு வேறு வழி இல்லை' என்னும் பகுதி இதற்கு ஆதாரம். இதனால், 'அறிவால் மட்டுமே முத்தி பெற முடியும்' என்பது தெரிகிறது.*

***வினா :*** *- இதை இன்னும் யார் யார் விளக்கியிருக்கிறார்கள்?*

***விடை :*** *- காரியாசான் சிறுபஞ்சமூலத்தில் ஞானத்தால் வீடாக காட்டு என்றும்,*

*திருநாவுக்கரசு நாயனார்*

*என்னை ஞானத் திருளறுந் தாண்டவன்*
*றன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே*

*(தனி திருக்குறுந்தொகை 8.2)*

*என்றும்*

*தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே யழுந்துகின்றீர்*
*வானத்தை வணங்கவேண்டில் வம்மீன்கள் வல்லீராகில்*
*ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவல்லாக்கு*
*ஊனத்தை யொழிப்பர் போலும் ஒற்றியுருடைய கோவே*

*(திருநாவுக்கரசர் - திருவெற்றியூர் - திருநேரிடை 8)*

*என்றும்*

*எம்மாழ்வார் திருவாய்மொழியில்*

*பிறவித்துயரத் ஞானத்துள் நின்று*
*துறவிக் சுடர்விளக்கந் தலைப்பெய்வார்* *(1.7.1)*

*என்றும்,*

*திருமூலர் திருமந்திரத்தில். (சமாஜப் பதிப்பு 1674-ம் பாடலில்)*

*ஞானத்தினாற்பத நண்ணு சிவஞானி*

*என்றும்,*

*தாயுமானவர்*

*தன்னையறிந்தவர் தம்மைத் தானாகச் செய்தருளுஞ் சமர்த்தை*

*மண்டலத்தின் (5)*

*என்றும் கூறுகின்றார்கள்.*

*(தொடரும்)*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

***பாகம்-2***

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*44. ராஸக்ரீடா வர்ணனையை விவரிக்கும் போது, ராஜா பரீக்ஷித், கேள்வியாகக் கேட்பதுபோலும், ஸ்ரீ சுகர் பதிலளிப்பதுபோலவும் நமக்கு ஏற்படும் சம்சயங்களை போக்கும் நோக்கத்துடன், பாகவதத்தில் கூறப்படுகிறது. கோபியர்களின் உள்ளத்திலும், மற்றும் எல்லாப் பிராணிகளின் உள்ளத்திலும் எந்த பகவான் புத்திசாக்ஷியாக உள்ளாரோ அந்த பகவானே பூலோகத்திலுள்ள அனைவருக்கும் அனுக்ரஹம் செய்யவே மானிட சரீரத்தை எடுத்து பல லீலைகளைப் புரிகிறார். அந்த லீலைகளை சிரத்தையுடன் கேட்ட மாத்திரத்திலேயே மனிதன் அப்பரமாத்மாவிடம் உறுதியான பக்தி நிறைந்தவனாகிறான். அவன் மனத்தை வருத்தும் காமம் தன்னைப்போல் ஒழிந்து விடுகிறது என்றும் கூறுகிறார். (பாகவதம் ஸ்க.10. அத்யா 33. ஸ்லோக 27-40)*

**அங்கப்ரதக்ஷிணம்**

*45. வரஹூர் உரியடி உத்ஸவம் அன்று இரவு கடுங்காலிலிருந்து பகவான் ஸகல அலங்காரத்துடன் தன் தேவிமார்களுடன் ஊர்கோலமாய் பவனி வருகிறார். அவருக்குப் பின் பக்தர்கள் நீராடி, ஈரமான உடைகளுடன் பெருமாளின் திருவருள் வேண்டி தரையில் படுத்துப் புரண்டு அங்கப்ரதக்ஷிணம் செய்கிறார்கள். அப்போது கோவிந்தா, கோவிந்தா, கோவிந்தா என்று உரக்க கூறிக் கொண்டு பக்தியுடன் மஞ்சள் பூசிய, தேங்காயை கூப்பிய கைகளில் வைத்துக் கொண்டு ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளை தொடர்ந்து பின் செல்கின்றனர் என்று ஸ்ரீ கிருஷ்ணசிக்யோத்ஸவ ப்ரபந்தம் கூறுகிறது. இந்த வழிபாட்டை ஸ்ரீதீர்த்தரே ஆரம்பித்து வைத்தார் என்று கூறப்படுகிறது.*

*46. இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் அங்கப்ரதக்ஷிண வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர் பாகவதோத்தமரான ஸ்ரீ அக்ரூரரே ஆவார். எப்படி என்று பார்ப்போம். கோகுலத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ணரை மதுராவிற்கு அழைத்துவர ஸ்ரீ அக்ரூரர், கம்ஸனின் உத்திரவின் பேரில் புறப்பட்டு மாலைப்பொழுதில் கோகுலத்தை அடைந்தார். அங்கு இந்திரன் முதலிய திக்பாலர்களுடைய கிரீடங்களுடன் சேர்ந்ததும் தூய்மை வாய்ந்த திருவடிப் பொடிகளையுடையதும், பூதேவிக்கு மகிழ்ச்சியளிப்பதும், தாமரை மலர், யவை, அங்குசம் முதலிய கோடுகளுடன் கூடியதுமான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திருவடிச் சுவடுகளைக் கண்ணுற்றார். கண்டவுடனேயே எல்லையற்ற ஆனந்தம் அடைந்து உணர்ச்சி வசப்பட்டார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. இவைகள் என் தெய்வத்தின் திருவடிகள் பட்ட பொடிகள் அல்லவா என்று எண்ணி தேரிலிருந்து துள்ளிக் குதித்து கண்ணனுடைய திருவடிகள் பட்ட மண் பொடிகள் மீது மீண்டும் மீண்டும் புரண்டார். அங்கப்ரதக்ஷிணமும் செய்தார். (பாக. ஸ்க. 10. அத்யா 38 ஸ்லோக 25, 26)*

*(தொடரும்)*

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

59. **கேள்வி :** உபாங்கங்களின் பெயரென்ன?

**பதில் :** 1. புராணம், 2. தர்ம சாஸ்த்ரம், 3. ந்யாயம், 4. மீமாம்ஸை.

60. **கேள்வி :** தர்சன ஸாஸ்த்ரங்களின் பெயரென்ன?

**பதில் :** ந்யாய வைசேஷிக, ஸாங்க்ய யோக, பூர்வ மீம்மம்ஸை உத்தர மீமாம்ஸை (வேதாந்தம் )

61. **கேள்வி :** நாலு ஆஸ்ரமங்களின் பெயரென்ன?

**பதில் :** ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தாஸ்ரமம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம்.

62. **கேள்வி :** அவதாரங்கள் எத்தனை? அவைகளின் பெயர்கள் என்ன?

**பதில் :** அவதாரங்கள் 24. தசாவதாரம் 10, 11. கபிலர், 12. ஹயக்ரீவர், 13. நாரதர், 14. ஹம்ஸ, 15. யஞ்ய நாராயணர், 16. தத்தாத்ரேயர், 17. விராட், 18. ரிஷபர், 19. நர நாராயணர், 20. வ்யாஸர், 21. விஷ்ணு, 22. த்ருவன், 23. ஸ்வயம்பூ, 24. வேணு.

63. **கேள்வி :** தசாவதாரத்தில் மாறுதல் என்ன?

**பதில் :** பலராமருக்குப் பதில் புத்தர் என்பர் சிலர்.

64. **கேள்வி :** 18 வித்யைகளின் பெயர் என்ன?

**பதில் :** 4 வேதங்கள், 6 வேதாங்கங்கள், 4+6 10 11. மீமாம்சம், 12. ந்யாயம், 13. தர்மசாஸ்த்ரம், 14. புராணம், 15. ஆயுர்வேதம், 16. தனுர்வேதம், 17. காந்தர்வ வேதம், 18 அர்த்தசாஸ்த்ரம்.

65. **கேள்வி :** 70 ந்யாய வைஸேஷிக ஸாங்க்ய யோக மீமாம்சை அவைகளின் ஆசார்யர்கள் யார்?

**பதில் :** ந்யாயம், கௌதமர், வைஸேஷிகம், கணாதர், ஸாங்க்யம், கபிலர், யோகம், பதஞ்சலி, மீமாம்ஸை, ஜைமினி.

(தொடரும்)